பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

A/L
இரசாயனவியல்
திங்கள், புதன் 2-30 — 4-00
சேதன இரசாயனம்
அடுத்து
அசேதன இரசாயனம்
திங்கள், புதன் 4-00 — 5-30
பொது இரசாயனம்
By
திரு. சண்முகசுந்தரம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை

# உதயன்

விலை
ரூ 2. 50

A/L
பௌதிகவியல்
வெள்ளி 4-00 — 6-00
மின்னியல்
சனி, ஞாயிறு 6-30 a.m
ஒளியியல்
By
திரு: சோதிலிங்கம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

சுடர்: 4 சிவப ஆண்டு தை மீ 20 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 24 (02-02-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 60

### மீளக் குடியமர்தல் நிவாரணம்

# 2 ஆம் கட்ட நிதிக்கு ரூ. 15 கோடி வந்தது

## யாழ். மாவட்ட மக்களுக்கு

யாழ்ப்பாணம், பெப்ரவரி, 02

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மீளக் குடியமர்தல் நிவாரணமாக வழங்குவதற்குத் தேவையான, இரண்டாம் கட்ட நிதியான 15 கோடி ரூபா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டது.

இந்தப் பணம், முதற்கட்ட நிவாரணமாக ஆயிரம் ரூபா பெறத் தகுதியாகக் காணப்பட்ட ஒன்றரை லட்சம் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

1987ஆம் வருட பிற்பகுதியில் நடந்த இராணுவத் தாக்குதலால் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து சென்ற குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 2,000 ரூபா நிவாரணமாக வழங்க அரசு முடிவு செய்திருந்தது.

அதன் பிரகாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உட்பட பல தமிழ் மாவட்டங்களில் தகுதியான பல லட்சக் கணக்கான குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டுவிட்டது; மேலும் பலருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2,000 ரூபா நிவாரணப் பணத்தை இரண்டாகப் பிரித்து இரண்டு கட்டங்களாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாம் கட்ட ஆயிரம் ரூபா இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம்கட்டமாக வழங்கத் தேவையான 15 கோடி ரூபாவே இந்த வாரம் யாழ்ப்பாணம் (8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப கட்சி பிளவுபடுறதுக்கு, சக்களத்திச் சண்டைதான் காரணம் என்டது அச்சொட்டாகச் சரிபோலையெல்லோ இருக்குது!

## மக்கள் வங்கியின்

## கன்னுதிட்டி, நவீன சந்தை கிளைகளில் பணப்புழக்கம்

### இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம். பெப் 2

மக்கள் வங்கியின் யாழ் நவீன சந்தைக் கிளை, கன்னாதிட்டிக் கிளை ஆகியவற்றில் இன்று வியாழக்கிழமை முதல் பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த சில வருடங்களாக சம்பந்தப்பட்ட இரு வங்கிக் கிளைகளிலும் பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தது தெரிந்ததே

[ஒ-ஐ]

## யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதத்துக்குள் நூறு தொலைபேசிகள்

யாழ்ப்பாணம், பெப். 2

எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் புதிதாக நூறு தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த வருட இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் மொத்தம் 500 தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(ஒ ஐ)

## திருநெல்வேலிப் பகுதியில் நேற்று சூட்டுச் சம்பவம்

### பல்கலைக்கழக மாணவன் காயம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமாலை 5-30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது பல்கலைக்கழகவளவுக்குள் நின்ற பல்கலைக்கழக மாணவரான வே. உமாசங்கர் (வயது 23) துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கு இலக்கானார்.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த இந்த மாணவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மதிப்பீட்டுப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு திரும்புகையிலேயே துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து அப்பகுதியை அமைதிப் படையினர் சுற்றிவளைத்திருந்தனர்.

மேலதிக சேத விவரம் செய்தி எழுதப்பட்டவேளை தெரியவரவில்லை.

(ஒ-10)

## போதகர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப் 2

கோப்பாயில் கடந்த சனிக்கிழமை இந்திய அமைதிப்படையினரால் விசாரணைக்கென கூட்டிச் செல்லப்பட்ட போதகர் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களையடுத்து அப் பகுதியில் வைத்து போதகர் எட்வேட் ஜெயராஜும் வேறு சில இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இளைஞர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டபோதிலும் போதகர் ஜெயராஜ் செவ்வாயன்றே விடுவிக்கப்பட்டார்.

(உ-10)

## நகரில் நேற்றும் பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாண நகரத்தில் நேற்றும் பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை.

அனேக பாடசாலைகளில் மாணவர்கள் முற்றாகச் சமுகமளிக்கவில்லை. ஒன்றிரண்டு பாடசாலைகளில் மட்டும் சில மாணவர் வந்திருந்தனர் என அறியப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாண நகரத்துக்கு வெளியேயுள்ள நகரப் பாடசாலைகளும் கூட இயங்கவில்லை எனவும் சொல்லப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

(ஒ)

## நவாலியில் சடலம்

நவாலியில் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

சூட்டுக்காயங்களுடன் சுடலைக்கு அருகில் இந்தச் சடலம் காணப்பட்டதாகவும்; பின்னர் அமைதிப்படையினர் சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ- 10)

## அ. தி. மு. க. அணிகள் இரண்டும் ஒன்று சேரும்?

அ. தி. மு. க. வின் இரண்டு அணிகளும் மீண்டும் ஒன்று சேரலாம் என்று சென்னை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அ. தி. மு. க வின் ஒரு பிரிவின் தலைவியான திருமதி ஜானகி அம்மாள் —"அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறேன்"— என்று நேற்று அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்தே இரண்டு அணிகளும் ஒன்றாகும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக எஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

மற்ற அணிக்கு செல்வி ஜெயலலிதா தலைவியாக இருக்கிறார். (ஒ-எ)

(மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்)

## அனுராதபுரத்தில் 5 தீவிரவாதிகள் சுடடுக் கொலை

அனுராதபுரத்தில் போட்டித் தீவிரவாதக் குழு ஒன்றினால் 5 தீவிரவாத சந்தேக நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட ஐவரும் தேசப்பிரேமி தீவிரவாத இயக்கத்தின் அதி தீவிர உறுப்பினர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் மீண்டும் உடனடி அமுல்!

### படைகளுக்குக் கூடுதல் அதிகாரம்!!

கொழும்பு பெப் 2

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதாக அரசு அறிவித்துள்ளது.

நாட்டின் தென்பகுதியில் வன்செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசு மேலும் தெரிவித்தது.

வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப்படையினருக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் நாட்டின் தென்பகுதியில் 11 பேர் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

கடந்த டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட்டதும்.

அதைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்செய்யப்படுவது நிறுத்தப்பட்டதும் தெரிந்ததையே.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில பிரிவுகள் நேற்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பெண்டஸ் பெரேரா உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தார். [ஒ-எ]

### நடவடிக்கை

கொழும்பு பெப் 2

நாட்டின் இன, மதரீதியில் குழப்பங்கள், வன்செயல்கள் புரிவோர் மீது பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது

இத்தகவலை அமைச்சர் பெண்டஸ் பெரேரா வெளியிட்டார்

(அ-எ)

### சுபநேரம்

02-02-1989
தை-20
வியாழக்கிழமை
சுபநேரம்:
08.06 முதல் 09.36வரை
ராகுகாலம்:
2.06 முதல் 3.36 வரை

### மார்ச் 31இற்கு முன்னர்

## அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம்

கொழும்பு, பெப் 2

சகல அரசு ஊழியர்களுக்கும் ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது.

அரசின் இந்த முடிவு நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வந்தது. எதிர்வரும் மார்ச் 31க்கு இடையில் சம்பள முற்பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியில் இருந்து மீள இச் சம்பளமுற்பணம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இச் சம்பள முற்பணம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. பத்து மாதங்களில் இது சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும்.

இதனைப் பெற பிணையாளர்கள் எவரும் தேவையில்லை. (ஒ-எ)

## தெற்கில் நேற்று மட்டும் 18 பேர் கொலை!

கொழும்பு, பெப் 2

தென் பகுதியில் நேற்று மட்டும் 18 பேர் கொல்லப்பட்டனர். அக்குரஸ்ஸ பகுதியில் 8 சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இவை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

எனினும் அப் பகுதி மக்கள் பாதுகாப்புப் படையினரே இம் மரணங்களுக்குக் காரணம் என்று கூறினர் (ஒ-எ)

## பிக்குவும், உதவியாளரும் வெட்டிப் படுகொலை

கொழும்பு, பெப். 2

வலப்பனை பொலீஸ் பகுதியில் இலுக்கும்புற பிரிவெனவில் 75 வயதுடைய பௌத்த மதகுரு ஒருவரும் அவரின் உதவியாளரும் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்றினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிறு இரவு இச்சம்பவம் இடம்பெற்றது

ஆயுதம் தரித்த கோஷ்டி பிக்குவிடம் ஒரு லட்சம் ரூபா பணம் தரும்படி கேட்டதாம்; பிக்கு அதற்கு மறுத்துவிட்டார். அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் வாக்குவாதப்பட்டனர்.

இக் கொலைகள் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-எ)

## முன்னாள் எம். பியின் மகள் சுட்டுக்கொலை!

மொனறாகலை முன்னாள் எம் பி. ஆர். எம். புஞ்சிபண்டாவின் மகள் தனது ஒன்பது மாதக் குழந்தைக்கு உணவூட்டிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத துப்பாக்கி மனிதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த வியாழன் இரவு இச் சம்பவம்இடம் பெற்றது

துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓடிவந்த கணவன் பயமுறுத்தப்பட்டார். அதைத்தொடர்ந்து அவர் பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## திருமலை இறங்குதுறையில் ஸ்ரீலங்கா பெண் பொலீஸ் சோதனை நடவடிக்கை

மூதூர், பெப் 2

திருகோணமலை இறங்குதுறையில் பெண் பயணிகளை ஸ்ரீலங்கா பெண் பொலீஸாரே சோதனை செய்து வருகின்றனர்.

இதே வேளையில் ஆண் பயணிகளையும் பொதிகள், பைகளையும் சோதனையிடும் பணியில் இலங்கைப் பொலீஸாரும் இந்திய அமைதிப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். (ஒ-98)

## ரஷ்ய, இந்திய புலமைப் பரிசில் பெற 17 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, பெப் 2

புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சோவியத் யூனியனுக்கும், இந்தியாவுக்கும் சென்று உயர் கல்வியைப் பெற விரும்பும்- ஜி. சி ஈ (உயர் தரம்) தகுதி பெற்றவர்கள்- இம்மாதம் 17 ஆம் திகதி வரை உயர் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

மருத்துவம், பொறியியல், விவசாயம் ஆகிய துறைகளில் உயர் கல்வி பெற்றுக்கொள்ள இத் திட்டத்தின் கீழ் வாய்ப் பளிக்கப்படும்.

22 வயதுக்கு உட்பட்டவர்களே இப்புலமைப் பரிசிலைப் பெற விண்ணப்பிக்க முடியும். [உ-எ]

## நஜிபுல்லா அரசு 6 மாதத்தில் கவிழும்

### அமெ. தூதர் ஆருடம்

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான அரசு 6 மாத காலத்தினுள் கவிழ்ந்து விடும்.

ஆப்கனுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் கிளாஸ்மன் இப்படி ஆருடம் சொன்னார்,

காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டதன் பின்னர், அமெரிக்க ராஜதந்திரிகள் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தனர்.

அவர்களுடன் வந்த திரு. கிளாஸ்மன் மேலும் சொன்னதாவது,

டாக்டர் நஜீப் அரசு 'இரும்பு உத்திரம் இல் (8ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C 50 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: பி. ப. 1 மணி முதல் 4 மணி வரை. 8, வைமன் வீதி, நல்லூர். (9418)

பாவித்த தளபாடங்கள், அலுமாரி, கட்டில், கண்ணாடி மேசை, Pram, மேசை, Oven, Boiler, Book Rack, Pyrexware, Hall - Set செற்றி, குளிர்சாதனப் பெட்டி, Wheel - Chair, T. V Stand மற்றும் பல மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. 790, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். (9417)

அலுமாரிகள் சாப்பாட்டு மேசைகள், சோக்கேஸ், Hall Set, Dressing Table, ஆர்மோனியம், T/ Writer, 3 - In - One, Fan, றேசிங் சைக்கிள், ஊஞ்சல், இரும்புப் பெட்டி, எலக்ரிக்கல் கேற்றில் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. இடம் 112, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (9404)

Frigen Gas மேற்கு ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட குளிர்சாதனப்பெட்டிகளுக்கும் [Refrigerator] குளிரூட்டிகளுக்கும், Air Condition machines), நிரப்பு வாயு (Gas) எம்மிடம் விற்பனைக்குண்டு. வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட், யாழ்ப்பாணம். [C/1413]

கேக் சாமான்களும் கேக் வகைகளும் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம். ஏ. சி. எஸ் தொகுதி ஸ்தாபனங்கள் பொலீஸ் முன்பாக கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். (C/1416)

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தேங்காய் எண்ணை ஆலைக்குரிய இயந்திரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. ஏசியன் 'ஓயில் மில்' பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (9309)

### கோழித்தீன்

"மல்டி றேட்ஸ்" இல. 234/C, கிரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் கோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சகலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (9104)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 9ஆம் திகதி வியாழக்கிழமையும், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 8 ஆம் திகதி புதன்கிழமையும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9288)

Hyline அமெரிக்கன் கறுப்பு பேட்டு ஒருநாள் குஞ்சுகளும், Indian Revar இறைச்சிக் குஞ்சுகளும், Prema குஞ்சுகளும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம். 112 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (9405)

### ஓடருக்குச்செய்து கொடுக்கப்படும்

திருமண பிறந்த தின வைபவங்களுக்கான அலங்கார கேக் வகைகள் ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம் ஏ.சி.எஸ் தொகுதி ஸ்தாபனங்கள், பொலிஸ் முன்பாக, சுன்னாகம். (C/1417)

### விற்பனையாளர்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல இரும்பு வியாபார நிறுவனத்திற்கும், மர வியாபார நிறுவனத்திற்கும் விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் 18 - 35 வயதிற்குட்பட்டவராகவும் மேற்படி வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். முழு விபரங்களுடனும் நற்சாட்சிப்பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்: இல 443, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (9319)

### மணமகன் தேவை

இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த B.A பட்டதாரி அரசாங்க ஆசிரியைக்கு செவ்வாய்க் குற்றமற்ற சாதக முள்ள டாக்டர், இஞ்ஜினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர் மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் கொடுக்கப்படும். ஆண் சகோதரங்களுக்கு தனிப் பெண். வெளிநாட்டுக்கு போகவிரும்புபவரும் விரும்பப்படும். விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 31, C/o உதயன், யாழ்ப்பாணம் (9422)

### NEW CITY TRADERS

சகல விதமான வீட்டு மின் உபகரணங்கள், வயரிங் பொருட்கள். Rice Cooker, Gas Cooker, Fan, Ceiling fan, Hot plate, மூன்று சில்லு சைக்கிள், பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள்கள், எவர் சில்வர், சில்வர் பொருள்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், மணிக்கூட்டு வகைகளுக்கு: New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1537)

### சேவை

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

### திருமண சேவை

புதிய மாங்கல்யா மல்ரிசேவிஸ் நிலையம் சமீப காலத்தில் 14 விதானையார் ஒழுங்கை கொழும்புத்துறை மேற்கில் ஸ்தாபிக்கப்பட்டு பல இனத்து கிறிஸ்தவ விவாகங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. நீங்களும் உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவத்தை விரைவில் நடாத்தி மகிழ என்னுடன் தொடர்பு கொள்க; விவாகப்பொருத்துனர், ஞ. திருவிளங்கம். (9320)

### வகுப்பு

புதிய பிரிவு காலை 6 — 7 30 மணி வரை திங்கள், புதன் நாட்களில் மட்டும். ஆரம்பம் 6- 2- 89. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9144)

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

9- 1- 89 இலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சகல வகுப்புகளும் 6- 2- 89 இல் மீண்டும் பழைய நேரசூசிப்படி ஆரம்பமாகிறது. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9143)

### கணித மயூரதி வெளியீடுகள்

1989 பெப்ரவரி க. பொ த பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ரூ 12/50 ஆண்டு 7 ஆண்டு 8, ஆண்டு 10 ஆகியவற்றுக்கான கணிதப் பயிற்சிகள் ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் ஸ்ரீசுப்பிரமணியம், சுன்னாகம் துர்க்கா ஸ்ரோர்ஸ் மற்றும் புத்தகநிலையங்களில் விற்பனையாகின்றது (9055)

### தவறிவிட்டது

சிவகுருலேன் கொக்குவில் மேற்கு சுப்பிரமணியம் பாமேஸ்வரன் ஆகிய என்னுடைய அடையாள அட்டை இல 632902204 V நல்லூருக்கும் புத்தூருக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன். (9414)

### பெயர் மாற்றம்

அச்சுவேலி தம்பாலையில் வசிக்கும் கந்தசாமி ஐயர் ரமணிஐயர் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை கந்தசாமி ஐயர் இரமணிசரசர்மா என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் தெரியப்படுத்துகின்றேன். க. இரமணிசரசர்மா. [9411]

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

★ ★ ★ ★ ★ ★

அன்புடையீர்!

நிகழும் விபவ வருஷம் தை மாதம் 21 ஆம் நாள் [03-02-1989)
வெள்ளிக்கிழமை முற்பகல் 9 15 மணி முதல்
10 15 மணி வரை உள்ள
★ சுபவேளையில் ★

| | |
|---|---|
| எனது புத்திரன் திருவளர் செல்வன் **ராஜா** (கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களுக்கும் | எனது ஏக புத்திரி திருவளர் செல்வி **இரத்தினேஸ்வரி** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
★ தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. த. நடராஜா (பெரியதம்பி பத்தர்) 4, கேசாவில் வீதி. (நாச்சிமார் கோயிலடி), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். | திருமதி பா. ஐயாத்துரை பிரதான வீதி. சங்கானை |

(8931)

## வர்த்தகக் கல்லூரி - இளவாலை

பதிவு இலக்கம் - 15934

சமூகசேவையே முழு நோக்காக எவ்வித இலாபமும் எதிர்பாராது இயங்கிவரும் இளவாலை வர்த்தகக் கல்லூரி. 15 - 02 - 1989 முதல் பின்வரும் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க உள்ளது.

பிற ஊர் மாணவர்களின் நன்மை கருதி மானிப்பாய் பிறைற்றன் ( Manipay Brighten ) கல்லூரியிலும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

1. மனைப் பொருளியல் டிப்ளோமா ( 9 மாதப் பயிற்சி ) ( Diploma In Home Economics )

| அறிமுறை (Theory) | செய்முறை (Practical) |
|---|---|
| மனை நிர்வாகம் | விஞ்ஞான முறையில் உடை தயாரித்தல் |
| தாய் சேய் நலம் | பொதுமுறை உணவு-சிற்றுண்டி தயாரிப்பு |
| குடும்ப சுகாதாரம் | கேக் அலங்காரம் |
| உணவும் போஷணையும் | சிகை அலங்காரம் |
| ஒழுக்கவியல் | மனை அலங்காரம் |
| முதல் உதவி | கைவேலை |

(தகைமை க. பொ. த. சாதாரண தரம்)

2. நான்கு மாத கால துரிதப் பயிற்சி.
மேற் கூறப்பட்ட செய்முறைகள் மட்டும் பயிற்றப்படும் தனித் தனியாகவும் பயிலலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ மேலதிக பயிற்சியாகத் தட்டெழுத்து இருபாலாருக்கும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்றுவிக்கப்படும்.

★ வெளிநாடு செல்லும் பெண்களுக்கு வசதியாக பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி, விடுதிமுகாமைத்துவம் (Hotel Management) ஆகிய நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

விழாக்களுகான கேக் ஐசிங், சிற்றுண்டிகள் மணப்பெண்ணை அலங்கரித்தல், மலர்ச்செண்டுகள், துப்பட்டு (Veil) என்பன குறைந்த செலவில் ஓடர்களுக்கு ஒழுங்கு செய்து தரப்படும்.

பாடசாலை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.
முகவரி;

| | |
|---|---|
| **அதிபர்/போதனாசிரியை,** வர்த்தகக் கல்லூரி, அகத்தர் ஒழுங்கை, இளவாலை. | **போதனாசிரியை,** (மனைப்பொருளியல்) பிறைற்றன் கல்லூரி, மானிப்பாய். |

(9421)

புனர்வாழ்வ அதிகாரிகள்

# குருநகர் இறங்குதுறை பகுதியைப் பார்வையிட்டனர்

குருநகர், பெப் 2

புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளும், வெளிநாட்டு புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட நிபுணர் குழுவும் செவ்வாய் காலை குருநகர் இறங்கு துறைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டது

யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் இந்த அதிகாரிகளையும், நிபுணர்களையும் குருநகர் பகுதிக்கு அழைத்து வந்து பாதிக்கப்பட்ட தொழில் நிலையங்களையும், சேதமடைந்த வீடுகளையும் பார்வையிட ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

குருநகர் பகுதிகளில் கடந்த கால அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட தொழில்கள், சேதமடைந்த வீடுகள், மற்றும் கட்டடங்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்களை சேகரித்துக் கொண்ட குழுவினர் தமது விஜயம் குறித்து திருப்தி தெரிவித்தனர்

குருநகர்மேற்கு கிராம சேவையாளர் திரு. றோமான் அன்ரனி குழுவினரின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ-51)

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

மானிப்பாய், பெப் 2

ஆனைக்கோட்டை, தாவடி, மறவன்புலவு, அச்செழு ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன.

இவ் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு தொண்ணூறிரண்டு லட்சம் ரூபாவைப் புனர்வாழ்வு அமைச்சினூடாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிராலயம் வழங்கியுள்ளது. (க-90)

பயிற்சி நிலையம்

## நாரந்தனைப் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

யாழ்ப்பாணம் பெப் 2

'தொழில் திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள இப் பயிற்சி நிலையம் நாரந்தனைப் பகுதி பெண்களுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். இந் நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களுக்குப் பணம் வழங்கப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திப்பயன் பெற வேண்டும்'

நாரந்தனை கிழக்கில் தொழிற் திணைக்களத்தால் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். சிவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஆர். தர்மலிங்கம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் உதவித் தொழில் ஆணையாளர் திரு. சிவப்பிரகாசம், நாரந்தனை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர், திரு கே. ஆர். சிவலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (க)

## மாணவர் ஒன்றியம் கவலை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அளவையியல் ஆசிரியர் இல்லாததினால் இப் பாடத்தைப் படிக்கும் மாணவர்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாக உயர் வகுப்பு வர்த்தக மாணவர் ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது. (க-90)

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

நல்லூரர் மக்கள் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் 6பேர் கொண்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி,

இடம்: நிலைய முன்றல்

விண்ணப்ப முடிவு திகதி: 10- 2- 89

| பரிசில்கள் | பிரவேசக் கட்டணம் |
|---|---|
| 1ஆவது 500/-ரூபா | 25. 00ரூபா |
| 2ஆவது 250/- ரூபா | |


விண்ணப்பிக்கும் முகவரி:

1. வ: பாலச்சந்திரன்
தலைவர்,
'ஞான பவனம்'
ஆடியபாதம் றோட், நல்லூர்
யாழ்ப்பாணம்.

2. சசி கூல்பார்
(நல்லூர் மார்க்கட் முன்பாக)

(9425)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சரஸ்வதி அம்பலவாணர்**


| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1935- 03- 05 | 1988- 01- 16 |

திதி: 1989- 02- 02

எங்கள் குலவிளக்கே! நீர் அணைந்து ஓராண்டு ஓடி மறைந்துவிட்டது. உம்மடி சேருமட்டும் எங்கள் துயர்மாறாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தம்பித்துரை குடும்பத்தினர்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்
உரும்பராய் தெற்கு.
ஒழுங்கை. (9423)

## இன்று 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கந்தசாமி செல்வராஜா**

(வெள்ளவத்தை நெசவாலை விநியோகிக்கும் முகாமையாளர்; கல்கிசை - ரோட்டறிக்கழக துணைத்தலைவர்)

| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 12. 09. 1935 | 03. 01. 1989 |

அன்பின் திருவுருவாய், ஆளுமைக்கு அணிகலனாய், இரங்கும்இதயமுடையவனாய், ஈசனுக்குரியவனாய், உலகிற்கு உத்தமனாய், வாழ்ந்து திடீரென மறைந்தாய். வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் திருவடி சேர்ந்த தலைவா!

உங்களது ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்னாரின் இறுதியாத்திரையில் பங்குபற்றியோர்., ஆத்ம சாந்திக்காக இடம்பெற்ற சகல கிரியைகளிலும் சமுகம் அளித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகள்!

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்,
மச்சான்மார், மருமக்கள்.

ஆனந்தக்குடில்,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (9413)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் கட்டமாக தொண்டர் படையில் 250 பேர் பணிபுரிவர்

பயிற்சி பெற்று வரும் மக்கள் தொண்டர் படையினர் முதல் தொகுதியான 250 பேர் 2ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தப் படுவர்.

இத்தகவலை வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப்பெருமாள் வெளியிட்டார்.

மக்கள் தொண்டர் படைக்குத் திரட்டப் பட்ட 1,500 பேர் இப்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

விரைவில் இந்த எண்ணிக்கை 7ஆயிரத்து 500 ஆக அதிகரிக்கும்.

இவர்கள் பின்னர் படிப்படியாக பொலீஸ் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட அதிகாரிகளை மீண்டும் வேலையில் அமர்த்துவது குறித்து இலங்கை அரசுடன் நான் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தியுள்ளேன்.

வடக்கு- கிழக்கு மாகாண அரசைக் கலந்தாலோசிக்காமல் அங்குள்ள அரசத் துறைகளில் இலங்கை அரசு செய்துள்ள நியமனங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும்.

கிராமங்களில் குடிநீர் விநியோகத்தை மேம் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை எனது அரசு மேற்கொள்ளும். பிரச்சினைக்குரிய கிராமங்களில் சுமார் 50 ஆழ் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படும்.

இப்படி முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்

(இ-எ)

## பாடசாலை வளர்ச்சி அதிபரில் தங்கி உள்ளது

### அதிபர் கூட்டத்தில் கல்வி அதிகாரி

பாடசாலையின் வளர்ச்சி அப்பாடசாலையை நிர்வகிக்கும் அதிபரிலேயே தங்கியுள்ளது. இருபத்திநான்கு மணி நேரமும் பாடசாலை பற்றிய கரிசனை உள்ளவர்களாக அதிபர்கள் இருக்கவேண்டும்.

பாடசாலை அமைந்துள்ள நிலையம், சூழல், மூலவளம் என்பனவும் அதிபரால் புரிந்து கொள்ளப்பட வேண்டியன.

யாழ். கல்வித் திணைக்கள ஆங்கிலக் கல்விக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு. தியாகராசா இராமநாதன் மகளிர்கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டமொன்றில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் இந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

(க- 27)

## தேவை வரும்போது தான் கூட்டுறவுச்சங்கங்களை நாடுகின்றனர்

### இந்த நிலைமை மாறவேண்டும்

### கருத்தரங்கில் உரை

கரவெட்டி பெப் 2

தனியார் விற்பனை நிலையங்களில் பொருள்கள் தட்டுப்பாடான நேரத்தில் மட்டுமே பாவனையாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை நாடுகின்றனர்.

இதைத் தவிர்த்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கூட்டுறவுக் கடைகளை அவர்கள் நாடவேண்டும்.

கரவெட்டி விக்னேஸ்வராக கல்லூரியில் இடம் பெற்ற கூட்டுறவுக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சுப்பிரமணியம் தனது உரையில் மேலும் கூறியதாவது:—

''ஒவ்வொரு இனமுகாமையாளரும் விற்பனையாளர்களும் நேர்மையாக நடப்பதன் மூலமே கூட்டுறவுச் சங்கங்களை முன்னேற்ற முடியும்.

எல்லாத்துறைகளிலும் கூட்டுறவுத்துறை இலாபம் பெற முடியாது.

கூட்டுறவு நிலையங்கள் பொருள்களை விற்பனை செய்து இலாபம் ஈட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாது. கலை, கலாசாரம் போன்ற துறைகளிலும் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

எமது கூட்டுறவு நிறுவனங்களை ஒரு சமூக நிறுவனமாக்க வேண்டும். இந்த வகையில் கட்டைவேலி - நெல்லியடி ப.நோ. கூ. சங்கம் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

மக்கள் வங்கி கூட்டுறவுச் சேவைக்கு என அமைக்கப்பட்டது இதன் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டதால் கிராமிய வங்கிகள் அமைக்கப்பட்டன,

இன்று பலர் ஓய்வூதியம் பெறுவதற்கு யாழ்-செயலகம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை,

தமது கிராமங்களில் உள்ள கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இச்சேவைகளை மேலும் நீடிப்பதற்கு பூரண ஒத்துழைப்பை ஒவ்வொருவரும் வழங்க வேண்டும்,

இப்படி அவர் கூறினார்.

(இ-70)

## நாவல் அறிமுக விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ் பல்கலைக் கழகத் தமிழ் மன்றம், இனுவில் கலை இலக்கிய வட்டம் ஆகியன இணைந்து நடக்தும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய ''முடிவல்ல ஆரமபம்'' நாவலின் அறிமுகம் விமர்சன அரங்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 - 30 மணிக்கு நடைபெறும்.

(க)

## பாராட்டு

கோப்பாய், பெப். 2

நெருக்கடியான காலகட்டத்தில் சிறந்த நிர்வாக ஏற்பாடுகளைச் செய்து மக்களுக்கு தங்களினால் முடிந்த வரை சேவை ஆற்றிய அச்சுவேலி ப.நோ கூ சங்கத்தை யாழ் கூட்டுறவு ஆணையாளர் பாராட்டியுள்ளார்.

(க- 72)

## ஞாபகார்த்தப் பரிசு

யாழ்ப்பாணம், பெப். 2

நயினாதீவு மகாவித்தியாலயத்திலிருந்து 1988 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான கலைத்துறை மாணவியான செல்வி வி. சுடர்மதி இராசநாயகத்துக்கு முன்னாள் கல்வி அதிகாரி பண்டிதர் வித்துவான் க. குகதாசன் திருமதி பார்வதி குகதாசன் ஞாபகார்த்தப் பரிசை வழங்கினார்.

## பொருட்காட்சி விற்பனை

சாவகச்சேரி, பெப். 2

தனங்கிளப்பில் பண்டிதமணி சி. க, நினைவு நூல் நிலையத்தில் பொருட்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் திரு வி எஸ் துரைராசா காட்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். (க - 31)

## சேவைக் காலப்பயிற்சி

கொடிகாமம் பெப் 2

சாவகச்சேரி வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பகுதி ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் சேவைக்காலப் பயிற்சி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா பயிற்சி நெறியை ஆரம்பித்துவைத்தார்.

இப்பயிற்சி வகுப்பில் தென்மராட்சி கிழக்குப் பகுதி பாடசாலைகளைச் சேர்ந்த 83 ஆசிரியர்கள் பங்கு கொண்டனர்.

சங்கீதக் கல்வி அதிகாரி சங்கீத பூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் திரு. கே. துரைரத்தினம், கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தம், கல்வி ஆலோசகர்கள் செல்வி த ஜீவரத்தினம், திருமதி ப சுந்தரலிங்கம், செல்வி ச. விஸ்வலிங்கம், திரு. எஸ். நாகராசா, திரு என். சுவாமிநாதன், திரு எஸ் நடராசா உட்பட பலர் பயிற்சி அளித்தனர். (க- 85)

## சிரமதானம் மூலம் பாடசாலைக்கு கொட்டகைகள்

கொடிகாமம். பெப் 1

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் இடப் பற்றாக் குறையை ஈடு செய்ய பாடசாலை அபிவிருத்திச் சபை பெற்றோர் ஊராவர்களுடன் ஒன்றிணைந்து இரு தற்காலிக கொட்டகைகளை சிரமதான முறையில் அமைத்துள்ளது (க-75)

## வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சமயக் கல்வி நிலையங்கள்

கொழும்பு, பெப்.2

பாடசாலையில் சேருவதற்கு முன்னர் மாணவருக்கு சமயக் கல்வி அளிக்கும் நிலையங்கள் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நிறுவப் படும்.

சமூகசேவைகள், தொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா இத்தகவலை திணைக்கள அதிகாரிகள் மாநாட்டில் வெளியிட்டார்.

இந்த நிலையங்களுக்கு நியமிக்கப்படும் ஆசிரியருக்கு மாத அலவன்ஸாக ஆயிரம்ரூபா வழங்கப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதும் இதன் நோக்கம் ஆகும் — என்றும் அவர் சொன்னார். (இ-எ)

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், பெப். 2

கோப்பாய் வடக்கில் இரவு 7மணி தொடக்கம் அதிகாலை 5மணி வரை அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக அமைதிப் படையினரின் அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளது.

(க- 72)

## நியமனம்

பருத்தித்துறை. பெப்: 2

பருத்தித்துறை நகர சபையின் சுருக்கெழுத்தாளராக செல்வி இராசலிங்கம் கலாவதி கடமை ஏற்றுள்ளார், (க-118)

## முதலமைச்சர் மன்னாருக்கு விஜயம்

மன்னார், பெப். 2

வடக்கு - கிழக்கு மாகாண முதல் அமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் மன்னாருக்கு விஜயம் செய்தபொழுது இங்குள்ள பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்கள் அவரைச் சந்தித்து மன்னாரிலுள்ள மக்களின் குறைபாடுகளையும் தேவைகளையும் எடுத்துரைத்தனர்.

முதலமைச்சர் பொது மக்களையும் சந்தித்து அவர்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்துகொண்டார்.

பொதுமக்களின் குறைபாடுகளுக்குத் தீர்வு காணும் வகையில் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி முதலமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (ச-ரி)


## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15 % |
| 6 மாதங்கள் | 15% | 17 % |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு" வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

**பணிப்பாளர் சபை**

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
(A I. B. Lond.).
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.).
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி,
(B. A. (Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏழாலை தெற்கு ப.நோ.கூ சங்கக்கிளையில் கொள்ளை

சுன்னாகம், பெப் 2

அன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஏழாலை தெற்குக் கிளை நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொள்ளை இடம்பெற்றது.

ஜன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்தவர்கள் பெரும் அளவிலான பொருள்களைச் சுருட்டிக் கொண்டு தப்பிவிட்டனர்.

மின்சார விநியோகம் இல்லாதிருந்த சமயம் இந்தக்கொள்ளை இடம்பெற்றது.

"கொள்ளை அடிக்கப்பட்ட கிளை நிலையம் மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் தூரமான இடத்தில் உள்ள மற்றொரு கிளைக்கு சென்றே பொருள்களைப் பெறுகின்றனர்.

ஏழாலை தெற்குக் கிளை நிலையமும் முன்பு கொள்ளையரின் கைவரிசைக்கு இலக்காகிய து குறிப்பிடத்தக்கது (இ-27)

## பாடசாலைப் படிப்பு முடிந்ததும் கல்விமுடிந்ததுஎன்று கருதலாகாது

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

கோப்பாய், பெப். 2

தமிழரின் கல்வி, பாரம்பரியம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். கல்வி என்பது பாடசாலைகளில் மட்டுந்தான் என்றில்லாமல் ஒருவனின் வாழ்நாள் வரை இருத்தல் வேண்டும். பாடசாலைப்படிப்பு முடிந்ததும் கல்வி முடிந்தது எனக் கருதலாகாது.

கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை நூலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. சி. க. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கல்விப் பணிப்பாளர் மேலும் பேசுகையில் பழைய மாணவர்கள் தம்மால் இயன்ற உதவிகளையும் பாடசாலைக்குச் செய்து வர வேண்டும் என்றார்.

தலைமை உரையாற்றிய சி. க. சுப்பிரமணியம் 'இந்நூல் நிலையத்தை உருவாக்க முன்னைநாள் அதிபரும் ஒரு காரணமாவார்.

எமது கிராமம் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாகக் கொண்ட மக்களை உள்ளடக்கியது.

இப்பாடசாலை நூல் நிலையம் அவர்களின் பிள்ளைகளுக்கு பெருதவியாக அமையும் என்றார்.

கல்விப் பணிப்பாளர் தமது வரவின் ஞாபகார்த்தமாக தென்னங் கன்றுகளை நட்டார். (இ-72)

## கல்வி உபகரணம்

சாவகச்சேரி, பெப். 2

வன்செயல்களின் போது குடும்பத்தலைவர்களை இழந்திருக்கும் நூறு மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களை அறவழிப்போராட்டக்குழு வழங்கியது.

இக் குழுவினர் 1978 ஆம் ஆண்டுமுதல் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (க-31)

## நினைவஞ்சலி



### திரு. கனகசபை தனபாலசிங்கம்

பிறப்பு; 10 03-1943 மறைவு; 04 11-1988

அன்பினால் பண்புதன்னால்
அனைவர்க்கும் உதவியானாய்!
இன்மொழி ஒன்றே பேசி
எவர்க்குமே இனியன் ஆனாய்!
நன்மையே எவர்க்கும் செய்வாய்
நம்மை விட்டுப் பிரிந்தாய்!
நீங்காத் துன்பத்தால் வாடுகின்றோம்
நீ யின்றேல் அமைதி உண்டோ?

கீரிமலை றோட், காங்கேசன்துறை.

குடும்பத்தவர்கள் (8925)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் கட்டடத்திணைக்கள உத்தியோகத்தர்

### அமரர் முருகேசு கயிலாயபிள்ளை

[தையிட்டி. K. K. S.]

மலர்வு: 1928 - 8 - 9 உதிர்வு: 1988 - 1 - 15

திதி. 1989 - 2 - 2

அன்பே உனைப்பிரிந்து ஆண்டொன்று ஆனதுவோ?
அன்பான அணைப் பென்றும் ஆறாத வேதனையோ
விதவையாக்கி யெனை வேதனையில் துடிக்கவிட்டு
இதயத்தைப்புண்ணாக்கி ஏகினீர் இறைவனடி!

பொட்டிழந்து பூ விழந்து பொன்நகையும் தானிழந்து
பட்டமரமானேன் பாரினிலே நான் இன்று
மறக்கமுடியவில்லை மனமோ ஆறுதில்லை
மறவென்றால் மறப்பேனோ
மனமொன்றிருக்கும் வரை.

தங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் பாசமுள்ள மனைவி.

க. கணேஸ்

[8923]

## விஞ்ஞான கூடம் இல்லாத குறையை வகுப்பறை மூலம் தீர்க்க ஆலோசனை

பருத்தித்துறை, பெப் 2

'விஞ்ஞானபாடம் கற்பிப்பதற்கு விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லை என்ற நிலையை விடுத்து பாடசாலையில் உள்ள ஓர் அறையையோ அல்லது வகுப்பறையையோ ஆய்வுகூடமாகப் பாவித்து விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர்கள் முன்வரவேண்டும்.

விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எஸ் செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பருத்தித்துறை கிழக்கு விஞ்ஞான கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை ஆரம்பித்துவைத்து அவர்பேசினார்.

வடமராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி கூறியதாவது:

பாடசாலை அதிபர்களும் விஞ்ஞான ஆசிரியர்களும் இணைந்து தேவையான ஆய்வுகூடப் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் வசதிக்கட்டணநிதி மூலமாகவோ, பாடசாலை அபிவிருத்திச் சபை நிதி மூலமாகவோ வேண்டிய முக்கிய பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும்

இவற்றைத் தனியான பொருட் பதிவேடுகளில் பதிந்துகொள்ள வேண்டும் அரசினால் கிடைக்கும் பாடத்துக்கான நிதியிலிருந்து அழிவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் தற்போது கிடைக்கக்கூடிய ஆய்வுகூட வசதிகளை வகுப்பறையில் நல்ல முறையில பயன்படுத்தி பின்தங்கிய பகுதியிலுள்ள மாணவர்களையும் கணித விஞ்ஞான பாடங்களில் சித்தியடையச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது

இப்படி அவர் கூறினார்.

புலோலி கொத்தணி அதிபர் திரு எஸ் ஏகாம்பரநாதன், விஞ்ஞான சேவைக்கால கல்வி ஆலோசகர் திரு வே சிவசிதம்பரம் உட்படப் பலர் கருத்துரை வழங்கினார்கள். (க-118)

## மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள்

அச்சுவேலி, பெப் 2

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மத்தி என மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளாக அச்சுவேலி செயற்படவுள்ளது.

தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கும் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து சில பகுதிகள் இணைக்கப்பட்டு அச்சுவேலி மத்தி கிராம சேவையாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. (க-11)

## முஸ்லிம் எழுத்தாளர் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப் 2

'மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனிடம் கற்ற பல முஸ்லிம் அறிஞர்கள் இன்று நாட்டில் பெரும் புகழுடன் திகழ்கிறார்கள் இனபேதம் கிஞ்சித்தும் அற்ற பேராசிரியர், முஸ்லிம்கள்பால் அதிக அக்கறையும் முஸ்லிம் கல்விமான்களை உருவாக்குவதில் மிக்க முயற்சியும் உடையவராய் விளங்கினார்'

முஸ்லிம் எழுத்தாளர் தேசியக்கவுன்சில் பேராசிரியர் வித்தியானந்தனின் மறைவை ஒட்டி வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது (இ

## திருத்த வேலை நடைபெறுகிறது

யாழ் அத்தியடி ஸ்ரீ சிதப்பர நடராஜ விநாயகர் ஆலயம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன

எதிர்வரும் பங்குனி உத்தர தினத்தில் கும்பாபிஷேகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது

## புதிய கட்டடம்

நெடுந்தீவு, பெப் 2

நெடுந்தீவு மேற்கு கோட்டைப் பகுதியில் உள்ள ஐக்கிய தீப சன சமூக நிலையத்துக்கு புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. (க-111)

## ஆண்டுக்கூட்டம்

இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 11 ஆம் திகதி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெறும். (க-118)

## பெற்றோர் கோரிக்கை

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் 9 ஆம் ஆண்டு வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வர்த்தகப் பாடத்தைக் கற்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரி அதிபரிடம் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-118)

## புதுமை மாதா சன சமூக நிலையம்

குருநகர், பெப் 2

குருநகர் புதுமை மாதா சனசமூக நிலையத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

காப்பாளர்கள்; வைத்தியகலாநிதி ஜே பி சி பிலிப்ஸ், வண பிதா பி எம் இம்மானுவேல். வழக்கறிஞர் யூஜின் மரியாம்பிள்ளை. யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட், சென் ஜேம்ஸ் ம வி அதிபர் அ. ஸ்ரனிஸ்லோஸ்.

தலைவர்: திரு இ கிறிஸ்தோப்பர், உபதலைவர்: திரு குசையா ஆசிரியர், செயலாளர்: திரு அ மரியநாயகம் (குயின்ரன்), உபசெயலாளர்: திரு நோ சகாயநாதன், பொருளாளர்: திரு கு. ஞானசேகரம்.

ஆறுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது. (க-51)

## சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கம்

சாவகச்சேரி, பெப். 2

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஏனைய உத்தியோகத்தர்கள் வருமாறு:

உபதலைவர்கள் கு. வி. மகாலிங்கம், க. இராசரத்தினம்

செயலாளர்: எஸ். மகானந்தராசா, உப செயலாளர்: க. கைலேஸ்வரன், பொருளாளர்: திரு [illegible] ம. ணியம். (இ-31)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

### மாரிமுத்து குமாரசாமி அவர்கள்

(முன்னாள் கிராம விதானையாரும், பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளரும் —புங்குடுதீவு)

மலர்வு: 15 - 10 - 1913 உதிர்வு: 03 - 01 - 1989

எம்மை அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து ஆதரித்த அன்புத் தெய்வமே! குடும்பமே கோயிலாக எல்லோருக்கும் வழிகாட்டியாக, எளியவராக, இனியவராக, அன்பாய், பண்பாய் பாசமாய் எம்முடன் வாழ்ந்து எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு எம்மை விட்டுப் பிரிந்த எம் குடும்பத் தலைவரே! எங்குதான் சென்றீரோ? கண்ணீரில் மிதக்கின்றோம் தங்கள் ஆத்மா விநாயகப் பெருமானிடம் சங்கமமாகிச் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[9140]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### ஸ்ரீமான் சுப்பிரமணியம் சதாசிவம்

மறைவு: 15 - 1 - 1988

திதி: 02 - 02 - 1989

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் மாறவில்லை.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு
மனைவி, பிள்ளைகள்
மானிப்பாய் மேற்கு.
மானிப்பாய்.

[9220]

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் திருமதி இலட்சுமி காந்தம் வைத்தியலிங்கம்

(ஞானதெணி, வல்வெட்டித்துறை)

தோற்றம்: 19 - 12 -1919 மறைவு: 04 - 01 - 1989

இவர் காலஞ்சென்ற பண்டிதர் சங்கர வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாலுமி குழந்தைவேற்பிள்ளை மயில்வாகனம், சிவக்கொழுந்து தம்பதிகளின் அருமை மகளும், தையல்நாயகி, சங்கரநாதன் (C. G R Head Guard) Dr. கைலாசபதி (Puttalam Govt Hospital). சோலாம்பிகை, கருணாம்பிகை, நீலாம்பிகை, அமுதாம்பிகை, சிவக்கொழுந்து. காலஞ்சென்ற முருகவேள், முத்துக்குமாரன் (Navigation Officer) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்காமதாசன் (Audit Examiner) செந்தித்துரை (Supdt. of Surveys, Jaffna) செல்வச்சந்திரன் (மொழி பெயர்ப்பாளர்), இரத்தினசோதி (SLPA Colombo), சந்திரபதி Valaichanai Paper Factory) செல்வச்சுந்தரம் (Navigation-Officer Canada). புஸ்பவதனா, சுசீலாதேவி, சுசீலா, பரிமளேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாப செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் 03-02-89 வெள்ளிக்கிழமை அதிகாலை நடக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஞானதெணி, வல்வெட்டித்துறை.

(8926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை மாணவருக்கு கதவடைப்புச் செய்யும் பெரியபாடசாலைகள்

## தமிழரின் கல்வி முன்னேற்றத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாதா?

''மண்ணுக்கீடு பொன் கேட்டால்
வலுவில் மனிதர் என்செய்வார்
திண்ணமாக இவ்வழக்கு
தீரா வழக்கே ஆகுமப்பா!''
- தேசிக விநாயகம்பிள்ளை

யாழ்ப்பாணத்தில் ஏழை மாணவன் ஒருவன் பெரிய பாடசாலையில் சேர்வதென்றால் அது அவ்வளவு இலேசான காரியமல்ல. இன்றைய உண்மையான நிலை இதுதான்.

அவனது கெட்டித்தனம்! கெட்டித்தனமா? முதலில் இதற்கான முதலீட்டுக்கு அவனிடம் ஏதேனுமிருக்கிறதா? இதுதான் இன்றைய கேள்வி.

ஏழை - விளும் மூளைசாலிகள் இருப்பார்கள் என்ற நல்ல பரந்த நோக்கிலேயே அவர்களும் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்குடனேயே இலவசக் கல்வி புகுத்தப்பட்டது.

எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே மாதிரியான கல்வி புகட்டப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயேபாடசாலைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்தது.

ஆனால் இன்று 'பெரிய பாடசாலைகள்' என்ற பெயர் தலை தூக்கிக் கொண்டிருப்பதால்இந்த எண்ணம், நோக்கம் சிதறடிக்கப்பட்டு விட்டது போலவே தெரிகிறது.

### செல்லாக்காசு

ஏழை மாணவனது தனித்திறமை, கெட்டித்தனம் எல்லாம் இந்தப் 'பெரிய பாடசாலை'யின் முன்னே செல்லக் காசாகவே இருக்கிறது.

'எவ்வளவு' டொனேஷன், வேணும்? என்னைக் கேளுங்கள் நான் தருகிறேன்'' என்ற கூக்குரல்களுக்கு என்னால் இந்த ஏழை மாணவனின் அழுகுரல் எப்படியப்பா கேட்க முடியும்?

''சோஷலிசம்'' என்று இன்று பேசாதவர்களே இல்லை எனலாம். ஆனால் எங்கு அது வளர்க்கப்பட வேண்டுமோ, எங்கு வேரூன்றப் படவேண்டுமோ அங்கேயே அதற்கு இடமில்லாதபோது வெளியில் அறிவு குறைந்த மக்கள் மத்தியில் இதனை எதிர்பார்ப்பது வீணை வேலை!

''எல்லோருக்கும் பாகுபாடற்ற கல்வி; இதுவே நோக்கம்'' என குரல் கேட்கிறது.

இன்று ''பெரியபாடசாலைகளில்'' சேர்ப்பதற்கென்று தரகர்களும் இருக்கின்றார்கள் என்பதனை கேள்விப்படும் பொழுது யாழ்ப்பணத்துக் கல்வி நிலைபற்றி அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை!

ஒரு படம் வெற்றியாகக் ஓடி விட்டால் குறிப்பிட்ட நடிகரையே 'புக்' பண்ணுவது போல் ஏ லெவலில் ஒரு முறை நல்ல பெறுபேறு எடுத்து விட்டால் அந்தப்பாடசாலையைச் சுற்றி ஏக கூட்டம், அங்குள்ளவர்களுக்கு ஏக மவுசு;

இதனை சாதகமாக்கி குறிப்பிட்ட சில வசதிகளை உடையவர்களே அதில் சேரவாய்ப்பும் ஏற்பட்டு விடுகிறது.

எல்லோருக்கும் தரமான கல்வி என்ற அடிப்படை அப்போது மண்ணோடு மண்ணாகி அடியில் புதைந்தே போய்விடுகிறது.

''நான் எனது திறமையினால் முன்னேறினேன்'' என பதைவிட, நான் அந்தப் பாடசாலையில் படித்தேன் என்பதே சில வேளைகளில் இன்று பெரிதாகக் கேட்கிறது.

சுயநம்பிக்கைகளில் சுருக்கங்கள் ஏற்படவும் இந்தப் ''பெரிய பாடசாலை'' என்ற மாயை வழிவகுத்துக் கொண்டிருக்கிறது.

இன்று பல கந்தோர்களில் உயர் பதவிகள் வகித்துக் கொண்டிருப்பவர்கள் சாதாரண பாடசாலைகளில் கற்றவர்கள் தான் என்ற உண்மை பலர் அறியாதது.

சாதாரண பாடசாலைகளுக்கு போதிய கட்டட வசதி, ஆசிரியர், தளபாட வசதிகள் செய்து தரப்படாததும் இத்தகைய ''பெரிய பாடசாலை'' மவுசு வளர ஒரு முக்கிய காரணம் என்பதுமறப்பதற்கில்லை!

ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையே இருந்து கொண்டிருக்கும் இடைவெளியை மேலும் அகலமாக்கிக் கொண்டிருப்பதற்கும் இந்த ''பெரிய பாடசாலைகள்'' மோகம் நன்கு தூபமிட்டுத் துணைபுரிகின்றது.

### பரவலாக்கல்

''பரவலாக்கல்'' என்னும் பெயர் பரவலாகக் கேட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஒரு சில பாடசாலைகள் மட்டும் இந்த ''பெரிய பாடசாலை'' மாயையை சாதகமாகப் பாவித்துக் கொண்டிருப்பதும் அதற்கு சிலர் சார்பாக நின்று கொண்டிருப்பதும் ''எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்'' என்ற நோக்கத்தைப் பாழடித்து நாசமாக்குவதாகவே இருக்கும்.

இந்தப் போட்டிகளில் சிக்கவிரும்பாத ஏழை மாணவன் உண்மையில் கல்வியில் வெறுப்படையவும் இந்தப் ''பெரிய பாடசாலை'' மாயையே காரணமாக இருக்கின்றது.

மூளைசாலிகள் இங்கு வாய்ப்பில்லாததால் வெளியே செல்கின்றார்கள் என தலையில் கை வைக்கின்றோம்.

இந்த சின்ன மூளைசாலி (ஏழை மாணவன்) 'பெரிய பாடசாலையினுள்ளே'' போகமுடியாமலிருப்பதற்கு என்ன செய்யப்போகின்றோம்?

மேலும் அதிக தரமான பாடசாலைகளைக் கட்டி வளர்க்கப் போகின்றோமா? அல்லது இந்தத் தேவையற்ற 'மாயை'யுள் சிக்கித் தவிக்க போகின்றோமா?

(இ)

க. கணேசலிங்கம்

## அந்த ஷர்வாணி ஆசாமி......!

இந்தியாவின் குடியரசு தினத்தை ஒட்டி கடந்த வியாழக்கிழமை கொழும்பு ''இந்தியா ஹவுஸில் தூதுவர் டிக்ஸிற் விருந்துபசாரமளித்தார் பிரமுகர்கள் நிறையச் சென்றனர்.

ராஜதந்திரிகள், அரசியல் பிரமுகர்கள், இந்திய சமூகத்தவர் - இப்படி மாளிகையில் வெளியே குழுமியிருந்தனர்.

அப்போது, ஷர்வாணி ''சூட்'' அணிந்து ஒருவர் 'டிப்டொப்' ஆக உள்ளே நுழைந்தார்.

இந்திய அதிகாரி ஒருவர் போன்றே அவர் தூரத்தில் காணப்பட்டார்.

ஷர்வாணி உடையில் இருந்த திரு. டிக்ஸிற் அவரை கைலாகு கொடுத்து வரவேற்றார்

பின்னர் இருவரும் அருகருகே இருந்து பேசிக்கொண்டனர்.

யார் அவர்?

அவர்தான், ஜனாதிபதித் தேர்தலின் போது திரு. டிக்ஸிறறுடன் மோதிக்கொண்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா!

## உதயன் மக்கள் சந்தி

## வாசகர் திருமுகம்

## இன்று எதிலும் கலப்படம்; என்று மாறும் இந்நிலை?

அண்மைக் காலத்தில் கட்டுப்பாடு எதுவும் இன்றி பொருள்களின் விலைகள்கண்டபடி வர்த்தகர்களினால் அதிகரிக்கப்பட்டன. இது ஒருபுறமிருக்க பொருள்களின் தரமும் பெரிதும் குறைந்துள்ளது. இன்று எங்கும் எதிலும் கலப்படம் என்ற நிலைமை ஒன்று உருவாகியுள்ளது.

நல்லெண்ணெயில் கலப்படம், மண்ணெண்ணெயில் கலப்படம், தேயிலையில் கலப்படம், கோப்பியில் கலப்படம் - இவ்வாறு சகல பொருள்களிலும் கலப்படம் செய்யப்படுகின்றது.

வர்த்தகர்கள் எந்தப் பொருளில் எதனைக் கலக்கின்றார்கள் என்பதுமக்களுக்குத் தெரியாது. குறைந்த தரமுடைய பொருள்களை மாத்திரமல்ல, மனிதருக்குத் தீங்கான பொருள்களையும் அவர்கள் கலக்கின்றார்கள் எனத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் விலைக்கட்டுப்பாடு அமுல் செய்யப்படவில்லை. அது போலவே தரக்கட்டுப்பாடும் இல்லை.

பொருள்களின் நிறையைப் பொறுத்தவரையிலும் பல குறைபாடுகள் இருக்கின்றன.

குறிப்பாகப் பாணின் நிறை ஒரிரு பேக்கறிகளை தவிர மற்றைய பேக்கறிகளில் எக்காலத்திலும் பாண் உரிய எடையில் பாவனையாளருக்குக் கிடைப்பதில்லை. சில பேக்கறிக் காரர்கள் வெளிப்படையாக இதற்குச் சொல்லும் நியாயம் இது தான் ''நாங்கள் என்ன செய்வது. மாவைக் கூடிய விலையில் வாங்கினால் அந்தக் காசை யாரிடம் எடுப்பது? நாங்கள் நட்டப்படுவதா'' எனக் கேட்கிறார்கள்.

சில இடங்களில் இப்பொழுதும் பழைய இறாத்தல் படிகளே உபயோகத்தில் உள்ளன. இதை நாங்கள் மரக்கறிச் சந்தையிலும் மீன் சந்தையிலும் காணக் கூடியதாகவிருக்கிறது. இவற்றைக் கவனிக்க யாரும் இல்லையா?

இணுவில். ஆ. [illegible]

### ரங்கநாயகி அன்பளிப்பு

கல்முனை, பெப 2

பாண்டிருப்பு திரௌபதை அம்பாள் ஆலயத்துக்கு 15,000 ரூபா பெறுமதியான ஒலி பெருக்கியை, பொத்துவில் முன்னாள் எம். பி. யும், மட்டக்களப்பு முன்னாள் மாவட்ட அமைச்சருமான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அன்பளிப்புச் செய்தார்.

திருக்கோவில் பகுதியிலுள்ள மற்றும் இரண்டு ஆலயங்களுக்கும் ஒலி பெருக்கிகளை அவர் வழங்கியுள்ளார்,

### பஸ் சேவை நடத்த மகஜர்

கரவெட்டி, பெப் 2

பருத்தித்துறை பஸ் சாலையிலிருந்து மட்டக்களப்புக்கு பஸ் சேவை நடத்தப்படவேண்டும் என்று கோரிவடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து அமைச்சருக்கும் மற்றும் இ. போ. ச உயர் அதிகாரிகளுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. (க-70)

### சங்கத்திற்கு சொந்தக்காணி

ஊர்காவற்றுறை, பெப். 2

ஊர்காவற்றுறை பல. நோ கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்குச் சொந்தக் காணியையும் சொந்தக் கட்டடத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-16)

### ஆங்கில போதனை

ஊர்காவற்றுறை, பெப் 2

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு விலகியோருக்கான பயிற்சி நெறிகளில் ஆங்கில பாடப் போதனைகளும் நடைபெறுகின்றன.

''அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தாபனம்'' என்ற நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் மின் இணைப்பு, வெல்டிங், தையல்பயிற்சி, நீர்க்குழாய் பொருத்துதல், ஆகிய துறைகளில சுமார் இருநூறு மாணவ மாணவிகள் பயிற்சிபெற்று வருகின்றனர்.

இந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களைத் தங்கள் போதனைக்குப் பயன்படுத்த வேண்டி இருப்பதால் இந்த ஆங்கில பாடப் போதனை இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-11)

## உலக வங்கியும் ஒரு வங்கி தான்!

உலக வங்கி, சர்வதேசிய நாணய சபை ஆகியன உலக நாடுகளுக்கு நிதி உதவி அளிக்கும் பெரும் நிறுவனங்கள் ஆகும்.

உலக வங்கி என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களில் ஒன்று. சர்வதேசிய நாணய சபை உலக வங்கியின் ஒரு கிளையாகும்.

இந்த உலக நாணய நிதி நிறுவனங்களின் செயற்பாடு பற்றிய இரகசியங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள் அல்ல.

இவை வளரும் நாடுகளுக்கு அல்லது மூன்றாவது உலக நாடுகளுக்கு வழங்கும் உதவி பற்றிய சில முக்கியமான தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன. தொழிற்துறை மயமாகிய நாடுகளின் பணத்தை மூன்றாவது உலக நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் முதலீடு செய்த உலக வங்கி 1987- 88 ஆண்டில் சுமார் 200கோடி (2 பில்லியன்) அமெரிக்க டாலரை இந்த நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்டது. இத்தொகை நேபாளம் அல்லது நைஜர் நாட்டின் மொத்த பொருளாதார உற்பத்திக்குச் சமமானது.

புனருத்தாரணம் அபிவிருத்திக்கடன் சர்வதேசிய வங்கி (IBRD) என்ற உலக வங்கியின் பிரதான முதலீட்டு கிளை 1988

### தகவல் மேடை

யூன் வரையான ஓராண்டில் மூன்றாவது உலக நாடுகளில் அது முதலீடு செய்ததிலும் பார்க்க கூடுதலான பணத்தை இழுத்தெடுத்துள்ளது

இதனை உலக வங்கியின் சமீபத்தைய ஆண்டு அறிக்கையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

புனருத்தாரணம் அபிவிருத்திக்கடன் சர்வதேசிய வங்கி மூன்றாவது உலக நாடுகளின் புதிய வேலைத் திட்டங்களில் 1500 கோடி அமெரிக்க டாலரை முதலீடு செய்தது.

ஆனால் 1700 கோடி அமெரிக்க டாலர் பணத்தை மீள் கொடுப்பனவுகளாகவும் வட்டியாகவும் இந்த வங்கி பெற்றுக் கொண்டது.

கடந்த ஆண்டு நைஜீரியா இந்த வட்டிக்கு மொத்தம் 24 கோடி அமெரிக்க டாலர் பணத்தைக் கொடுத்தது.

உலக வங்கி என்பதும் உண்மையில் ஒரு வங்கிதான். அதுவும் தான் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் பெற விரும்புகின்றது என்பது மேற் கூறியவற்றால் புலனாகின்றது.

இன்னும் மொட்டையாகக் கூறினால் உலக வங்கி பணம் சம்பாதிக்க வர்த்தகத்தில் ஈடுபடுகின்றது; உதவி அளிக்க அல்ல. ★ ★

### கலகம் மூட்டும் நாணயச் சபை

சர்வதேசிய நாணய சபை குறுகிய காலக் கடன்களை வழங்கும் ஒரு நிறுவனமாகும், ஆனால் அது விதிக்கும் நிபந்தனைகளோ அனந்தம்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதால் பல நாடுகளில் கலகங்களே ஏற்பட்டன.

சாம்பிய ஜனாதிபதி கவுண்டா சர்வதேசிய நாணய சபையிலிருந்து கடன் பெறுவதற்காக அதன் நிபந்தனைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தார்.

உடன் கொப்பர் பெல்ட் பிரதேசத்தில் கலகங்கள் மூண்டு பலர் உயிரிழந்தார்கள். கவுண்டா நிபந்தனைகளை நிராகரிக்க வேண்டியதாயிற்று.

இதனால் சாம்பியாவுக்கு நாணயச் சபை கடன் கொடுக்க மறுத்தது. அதுமட்டுமல்ல உலக வங்கியும் முதலீடு செய்ய மறுத்தது.

சர்வதேசிய நாணயச் சபையின் நிபந்தனைகள் ஏழைகளின் வயிற்றில் அடிப்பவையாக அமைகின்றன என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

நாணய மதிப்பிறக்கம், அரசாங்க செலவினங்கள் குறைத்தல். உணவு மானியங்களைக் குறைத்தல். அரச முயற்சிகளைத் தனியார் முயற்சிகளாக மாற்றுதல் ஆகியன சர்வதேசிய நாணய சபை முன்மொழியும் நிவாரணிகள் ஆகும்.

நாணய மதிப்பிறக்கத்தினால் பொருட்களின் விலை உயர்கின்றது; அரசாங்க செலவினங்களைக் குறைப்பதால் தொழில்களும் சம்பளமும் குறைவதுடன் சமூக சேவைகளும் பாதிக்கப்படுகின்றன. அரச முயற்சிகளைத் தனியார் முயற்சிகள் ஆக்குவதால் வேலை இழப்புக்கள் ஏற்படுகின்றது.

சர்வதேசிய நாணய சபையின் செயற்பாடுகளைப் பற்றிய ஐயப்பாடுகள் தற்போது இந்த நிறுவனத்துக்கு உள்ளேயே தோன்றி வளர்ந்துள்ளது. இதில் வெளிவரும் விமர்சனங்கள் உலகத்தின் கண்களைத் திறந்து விடும் தன்மையுடையனவாக அமைகின்றன.

(நன்றி. பரிணாமம்)

தொகுப்பு: செய்திநேசன்.

## இலைச்சுருள் நோயால் புகையிலைச் செடி பாதிப்பு

சுன்னாகம், பெப் 2

அதிக அளவில் மேற்கொள்ளப்பட்ட புகையிலைச் செய்கை இலைச் சுருள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. எந்த மருந்துக்கும் கட்டுப்படாத இந்நோய் அநேகமாக எல்லாப் புகையிலைக்கன்றுகளிலும் காணப்படுகிறது.

புகையிலைச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்நோயின் தாக்கத்தினால் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-27)

### நியமனம்

போப்பாய்த் தொகுதியில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய பதினொரு பேரும் கிராம சேவையாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

(க-11)


## கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் சுமார் 3750 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

முடிவுத் திகதி:- 09 02 1989 வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை.

விண்ணப்பப் பத்திரங்களுக்கும், விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

—பொது முகாமையாளர்

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி. 1989 - 01 - 31. (C/1163)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

156/3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

# G.A.Q., B.A.

வகுப்புகள்

பொருளியல்: வரதராஜன்
தமிழ்: குழந்தைவேல்
இந்துநாகரிகம்: காரை சுந்தரம்பிள்ளை
மெய்யியல்: சந்திரராஜா
அரசறிவியல்: தமீம்

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வியில் தனித்துவம் வாய்ந்த இவ் விரிவுரையாளர் குழு யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பர்.

ஆரம்பம்: 4-2-89 சனி
2-00 p. m.

பல்கலைக்கழகப் பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு:
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (9283)

உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு தைத் திங்கள் 22 ஆம் நாள் [04 - 02 - 1989] சனிக்கிழமை மாலை 3-05 மணி தொடக்கம் 5-05 மணிக்குள் வரும்
★ சுபவேளையில் ★

எனது புத்திரன்
திருநிறை செல்வன்
ஆறுமுகஜோதி
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
பராசக்தி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு தாங்களும் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

தங்கள் நல்வரவை நாடும்!

திருமதி வ. வன்னியசிங்கம்
கைதடி தெற்கு,
கைதடி.

திரு. திருமதி க. இளையதம்பி
விடத்தற்பளை,
மிருசுவில்.

[8909]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னுள் உபவேந்தரும், தமிழறிஞருமான பேராசிரியர் சு. வித்தியானந்தவின் இறுதிச் சடங்குகள் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. அவ்வேளை பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சியில் பல துறைகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் பேராசிரியரின் சேவைகளை நினைவுகூர்ந்தனர். பல்கலைக் கழகச் சார்பில் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, சைவமக்கள் சார்பில் துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, கிறிஸ்தவ மக்கள் சார்பில் வண பிதா பிரான்சிஸ் ஜோசப், எழுத்தாளர் சார்பில் திரு. செங்கை ஆழியான், முஸ்லிம் மக்கள் சார்பில் ஒஸ்மானியாக் கல்லூரி உப அதிபர் ஜனாப் ஹமீத், தெல்லிப்பழை மக்கள் சார்பில் திரு. சி. சிவமகாராசா, நடிகர்கள் சார்பில் திரு. வி. வி. வைரமுத்து ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தும்போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (அ)

[படங்கள்: கே. எஸ். ராஜா]

# சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்

நுவரெலியா, பெப். 2 சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்கள் சென்று தரிசிப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் அரசாங்க அதிகாரிகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் வழி நெடுகிலும் மின்சாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மலை அடிவாரத்தில் அநேக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அட்டனில் இருந்து சிவனொளிபாதமலை அடிவாரம் வரை விசேஷ பஸ்வசதி செய்யப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களுக்குத் தேவையான குடி தண்ணீர் மின்சாரம், சுகாதாரம் உணவு வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீபாத ஸ்தானதிபதி வணக்கத்திற்குரிய ஹந்கபாங்கொட விமல தேரர் இதனைத் தெரிவித்தார். (க-58)

# தலதா மாளிகைக்கு யானைக்குட்டி அன்பளிப்பு

கண்டி தலதா மாளிகைக்கு யானைக்குட்டி ஒன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அன்பளிப்புச் செய்துள்ளார்.

மறைந்த பிரதமர் இந்திராவை நினைவு கூருவதாக 'இந்திர ராஜா' என்று யானைக் குட்டிக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து இந்த யானைக்குட்டி கப்பல் மூலம் இன்னும் சில தினங்களில் காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்படும்.

7 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த 'ராஜா' யானைக்குப் பதிலாக இக்குட்டி, ரந்தோலி பெரஹெராவில் கலந்து கொள்ளும். (இ-எ)


## சாவகச்சேரி தேவேந்திரா

வெண்திரையில்

தினசரி - 10 30 2.30

சிவாஜி (3 வேடத்தில்) - தேவிகா

M.R ராதா (2வேடத்தில்) - பாலாஜி

வசந்தி நடித்த

பலே பாண்டியா!

(புதிய பிரதி) (8928)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சிறிசுப்பிரமணியம் உமாசங்கர்**

படைப்பு 15-09-1959 அழிப்பு 19-12-1988

போய் வருவேன் என்று சொல்லி வரும் வழி மறந்து போனுயோ
போனவழி எங்கே என்று தெரியாது தவிக்கின்றோம்
வாழ விதியிருந்தும், வழியற்று கோரமாய் சென்றதும் ஏனையா?
வாயிருந்தும் ஊமைகளாய் வாழ்கின்றோம் மண்மீதே
அன்னை இங்கு காத்திருக்க அனுதரவாய் போட்டனரோ உன் உடலை
பொன் உடல் சாய்ந்ததையா புழுதிமண் ரோட்டில்
மக்கள் எல்லாம் பாடித் தொழும் மார்கழித் திருவெம்பாவையில்
எக்காலமும் இங்கு வேண்டாம் என வைகுந்தம் தான் சென்றீரோ?
தந்தை வழி பின்பற்றி தனயன் நீயும் சென்றுயோ
தந்தையையும், தனயனையும் இழந்து தவிக்கின்றோம் நாமிங்கே
ஆருத்துயரத்தில் மீளாத்துயில் கொண்ட மகனே! சகோதரனே!!
வாழ்வா? சாவா? என்ற எங்கள் உள்ளக் குமுறல் என்றும் தணியாத தாகமாகி விட்டது.
உமது ஆத்மா சாந்தியடைய எங்கள் பிரார்த்தனைகள்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

02-02-89 வியாழன் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்புத் தாய், ஆச்சி, சிறியதாய்மார் குடும்பம், அண்ணன்மார், அண்ணிமார், அக்கா, அத்தான், தம்பிமார், தங்கச்சி, மச்சான், பெறுமக்கள், மருமக்கள்.**

இல: 4, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (9408)

# அடிப்படை அறிவைப் பெற்றால் மட்டுமே சமூக அபிவிருத்திக்கு உழைக்க முடியும்

பருத்தித்துறை பெப் 2 "மக்கள் அடிப்படை அறிவைப் பெற்றால் மட்டுமே சமூக அபிவிருத்திக்காக உழைக்க முடியும். சன சமூக நிலையங்களின் முக்கியபணி மக்களுக்குச் சமூகம் பற்றிய தெளிவான அறிவைப் புகட்டுதலே ஆகும்"

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாச புனரமைப்புக் கூட்டத்தில் சமாச இணைச் செயலாளர் திரு. ச. செந்துராசா மேற்கண்டவாறு கூறினார்.

புனரமைப்புக் கூட்டம் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி எஸ் கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

திரு ச செந்துராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

கிராம சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கென சகல சன சமூக நிலையங்களிலும் பாலர் பாடசாலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

கிராமங்கள் தோறும் கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களையும் நிறுவுவதுடன் சகல கிராமங்களிலும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களையும் அமைக்க ஒன்றியம் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது

இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்ட சன சமூக நிலைய ஒன்றிய இணைச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா பேசியதாவது-

கிராமத்தின் வளர்ச்சியில்தான் ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது என்பதை கிராம சுயராஜ்ய திட்ட மூலம் அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தினார்.

கிராமத்தின் அத்தியாவசிய தேவைகள் யாவும் அக்கிராமத்திலேயே பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்பது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

வளர்ந்து வரும் சமூக வளர்ச்சிக்கேற்ப நாமும் இத்திட்டங்களை விரிவுபடுத்திச் செயற்படுத்தும் தேவை எழுந்துள்ளது. இப்படி அவர் கூறினார். (இ-118)

## பனைவள நூலகம்

மானிப்பாய், பெப். 2 பனைவள அபிவிருத்திச் சபையினரால் பனைவளம் சம்பந்தமான நூலகம் ஒன்று கைதடியில் அமைக்கப்படவுள்ளது.

கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் இந் நூலகத்துக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் பத்தாயிரம் நூல்களை வழங்கியுள்ளது. (க-90)

# உருத்திரபுரம் லீக் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் 2 பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் முல்லைத்தீவு அணியை 1-0 கோலால் வெற்றிபெற்றது.

உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

ஆட்டம் தொடக்கம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்தது.

இறுதியில் கிளிநொச்சி முன்னணி வீரர் கஜேந்திரன் ஒரு கோல் போட்டார்.

வவுனியா கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ் குணரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் திரு. எஸ் அமிர்தலிங்கம் பிரதம அதிதியாகவும் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு கே. கார்த்திகேசு கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டார்கள். (க)

## கோவளம் சாம்பியன்

காரைநகர். பெப். 2 காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டிக் கழகங்களுக்கு இடையே கிரிக்கெட் போட்டியும் சரபந்தாட்டப் போட்டியும் எழுபேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியும் நடத்தப்பட்டன,

கிரிக்கெட்டிலும் உதைபந்தாட்டத்திலும் கோவளம் இளைஞர் மன்றம் சம்பியனாகியது.

## ரோட்டரிக் கழக அன்பளிப்பு

உரும்பராயில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஞானசம்பந்தர் குழந்தைகள் இல்லத்துக்கு. யாழ் ரோட்டரிக் கழகம் அமரர் ஆர். அரசரத்தினத்தின் ஞாபகார்த்தமாக இரு தட்டுக்களைக் கொண்ட குழந்தைகளுக்கான படுக்கை ஒன்றினை அன்பளிப்புச் செய்தது.

குழந்தைகள் இல்லத்தின் சார்பில் தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகக் காரியதரிசி திரு. அரவிந்தன் இந்த அன்பளிப்பை ஏற்றுக்கொண்டார். (ச)

## கோழி நோய்

சுன்னாகம், பெப். 2 பல பகுதிகளிலும் வேகமாகப் பரவி வரும் 'படுவான்' நோய் காரணமாக கோழிகள் நூற்றுக்கணக்கில் மடிந்து வருகின்றன. (க- 27)


# "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Excavator Operator | — 1 | Vacancy | ஆங்கில அறிவு ஓரளவு அவசியம் |
| 2. | Grader Operator | — 1 | " | |
| 3. | General Electrician | — 2 | " | |
| 4. | Diesel Petrol Mechanic | — 2 | " | |
| 5. | Car Wiring Mechanic | — 1 | " | |

## SHIP VACANCIES

### கப்பல் வேலைவாய்ப்புக்கள்

| | | | | Salary |
|---|---|---|---|---|
| 1. | Second Engineer | — 5 | Vacancies | — Open |
| 2. | Rigger | — 32 | " | — " |
| 3. | Cheif Mate | — 5 | " | — " |
| 4. | Mechanics (Ship) | — 10 | " | — 400 USD |
| 5 | Able Sea Men | — 10 | " | — 300 USD |
| 6 | Cooks | — 5 | " | — 300 USD |

★ புதிதாகக்கடவுச் சீட்டு வேண்டுபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக் கடவுச்சீட்டு எடுப்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

★★★ பொன்ட் (BOND) செய்து கொடுக்கப்படும்.

✶ நம்பிக்கை ✶ நாணயம்

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"இந்திர பவனம்"
சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

இல. 1, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/ 1414)



2. 2. 1989 இன்று தமது 61ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும்

செபமாலைதாசர் ஆச்சிரமத்தினரின் சேவைகள் இறைவனுக்கும் மக்களுக்கும் உதவ வாழ்த்துகின்றோம்.

★ வாழ்க செபமாலைதாசர்!
★ வளர்க அவர்களின் சேவை!!

## ★ விநாயகர் ஸ்ரோஸ் ★

166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23787

(9415)

இன்று 61ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தோலகட்டி செபமாலைதாசர்களையும் அவர்களது சேவையையும்

★ வாழ்த்துகின்றோம். ★

தோலகட்டி தயாரிப்புகளை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## ★ சிற்றி மெடிக்கல்ஸ் ★

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(9420)

61 ஆவது ஆண்டு நிறைவு விழாவை இன்று கொண்டாடும் தோலகட்டி செபமாலை தாசர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

✶

தோலகட்டி தயாரிப்புகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

## ★ வரணி மிசன் ★

விற்பனை நிலையம்
145, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(9419)

61 ஆவது ஆண்டு நிறைவு விழாவை இன்று கொண்டாடும் தோலகட்டி செபமாலைதாசர் சபையினரை வாழ்த்துகின்றோம்.

தோலகட்டித் தயாரிப்புகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## பரணி மருந்துச்சாலை

456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(9418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:
அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

பொருள்:
அன்பில்லாதவனாக இருப்பதால் பகைவர் உள்ளவனாகவும்) தக்க துணைவர் இல்லாதவனாகவும் ஆகிவிடுகிறான். அதனால் வலிமையற்றவனாக (மெலியான்) பகைவருடைய பலத்தை எப்படிச் சமாளிப்பான்?


# உதயன்

இல. 392/3 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 21071
02. 2. 1989 வெ. இல23


## சித்த வைத்தியத்தை இரட்சிக்க...!

இலங்கை நாட்டின் சுதேச வைத்தியத்தில் மூன்று பிரிவுகள் அடங்கும். சிங்கள மக்களின் ஆயுள்வேத வைத்தியம், தமிழ் மக்களின் சித்த வைத்தியம், முஸ்லிம் மக்களின் யுனானி வைத்தியம்.

பல நாடுகளிலும் மேற்கு நாட்டு வைத்தியமே மேலோங்கி நிற்கிறது. பிரபலமாக விளங்குகிறது என்றாலும் சுதேச வைத்தியங்கள் அந்தந்த நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று விளங்குகின்றன. அந்நாட்டு அரசுகள் சுதேச வைத்தியத் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்க்கின்றன. அதனால் அவை வளர்ச்சியும், மிளிர்ச்சியும் பெற்று இலங்குவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையிலும் சுதேச வைத்திய முறைகளில் ஒன்றான ஆயுள்வேதத்துறை அரசாங்கத்தின் அதீத ஆதரவுடன், ஆக்கமும் ஊக்கமும் பெற்றுப் பேணப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருகின்றது.

பெரும்பான்மை இன மக்களின் சுதேச வைத்தியம் என்பதால் அதன் மீது பெரும் அளவில் கவனம் செலுத்தப்படுகிறது. அதற்கெனத் தனி அமைச்சும், அமைச்சரும் உண்டு.

சிங்கள ஆயுள்வேதம் பேணப்பட்டு, வளர்க்கப்பட்டு, மேம்படுத்தப்படும் அளவுக்கு சித்த, யுனானி, சுதேச வைத்திய முறைகள் மேம்படுத்தப்படவில்லை. அவை சிறுபான்மையினருடையன ஆயிற்றே!

தமிழ் மக்களின் பாரம்பரிய மருத்துவமான சித்த வைத்தியம், அந்நியர்களின் ஆட்சிக் காலங்களில் எவ்விதம் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதோ, அதே நிலையே இப்போதும் ஏற்பட்டிருக்கிறது இவ்வாறு வட இலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவர்கள் சம்மேளனத்தைச் சேர்ந்த வைத்திய சிரோமணி ம. சோ. சுந்தரம் கவலை தோய எடுத்துரைத்துள்ளார். சித்த வைத்தியம் ஈழத் தமிழ் மண்ணில் தொடர்ந்தும் அவல நிலையில் இருந்து அந்தரிக்க வேண்டுமா என்றும் அவர் அர்த்தபுஷ்டியான கேள்வியையும் எழுப்பி உள்ளார்.

மேற்கு நாட்டு வைத்தியம் அறிமுகம் ஆவதற்கு முன்னர், தமிழர்களின் சித்த வைத்தியம் மேம்பட்ட நிலையில் இருந்தது. மக்களை ஆரோக்கியமானவர்களாக வாழ வைத்தது. தமிழ் அரசர்களின் அரவணைப்பில் வளர்ந்தது. மக்களின் மத்தியில் நம்பிக்கைக்கும், அபிமானத்துக்கும் உரிய வைத்தியமாகவும் விளங்கியது.

ஆனால் இன்று அதற்கு மக்கள் ஆதரவும் குறைவு: அரசின் பின்பலமும் இல்லை. பல வைத்திய முறைகள் மறைந்து போயின. இன்னும் பல அழிந்து போகும் ஆபத்தான நிலையில் உள்ளன. சில வைத்தியப் பரம்பரைகள் இப்போது இருக்கும் சந்ததியோடு முடிந்து போகும் பேராபத்தும் உண்டு.

தீராது எனக் கருதப்படும் நோய்களைத் தீர்க்க வகை செய்யும் வாகடங்கள் வழிமுறைகள் ஈயாச் சொத்தாகக் கிடந்து சிரழிந்ததும் உண்டு.

சித்த வைத்தியர்களில் சிலர் வைத்திய முறைகளைத் தமது குடும்பச் சொத்தாக வைத்திருக்க நினைத்ததாலும் அந்த வைத்தியம் பரவலாகி, பரந்து, படர்ந்து வளர முடியாமலும் போயிற்று.

மேற்குலக நாகரிக மோகத்தில், வைத்திய மோகத்தில், தமிழ் மக்கள் சித்த வைத்தியத்தை உரியவாறு ஆதரிக்க மறந்தார்கள். இன்றைய அதன் அவல நிலைக்கு அதுவும் மிக முக்கிய காரணியாகும்.

சிங்கள ஊரில் "வெதமாத்தையாவுக்கு" அப்பகுதி மக்கள் கொடுக்கும் மதிப்பு, ஆதரவில் நூறில் பத்தாவது எங்கள் "பரியாரிமார்"களுக்கு இங்கு இல்லையே!

சிறப்புகள் பல கொண்ட சித்த வைத்தியம் ஈழத்தமிழ் மண்ணில் அழிந்து போகாமல் தடுப்பதற்கு இந்தக் கட்டத்திலாவது அரசும், மக்களும் முன்வர வேண்டும்.

அதனைப் பேணவும், நவீன காலத்தேவைகளுக்கு உகந்தவாறு வளர்க்கவும், மேலும் மேம்படுத்தவும் மக்கள்— சித்த வைத்தியர்கள் — அரசு — ஆகிய முத்தரப்பினரும் சேர்ந்து திட்டமிட்டு, கடினமாக உழைத்தல் அவசியம்.

மேற்குலக வைத்தியத்துக்குச் சற்றும் சளைக்காத மட்டத்துக்கு, சித்தவைத்தியத்தை உயர்த்தி எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான சகல வளங்களையும் உரிய முறையில் ஒன்று திரட்டிச் செயற்பட முன்சொன்ன மூன்று தரப்பாரின் பரந்த மனமும், முயற்சியும் தேவை.

வெறும் வாய்ச்சொல்லும், எழுத்தும் அல்ல; செயற்பாடே சித்த வைத்தியத்தை இரட்சிக்க முடியும்.

# இஸ்ரவேலிய இராணுவத்தின[ர் மீது] கல்லெறிந்த
# பலஸ்தீன இளைஞருக்கு இரண்[டு] வருடச் சிறை!

டெல்அவிவ், பெப் 1

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இஸ்ரவேலிய இராணுவத்தினர் மீது கல் எறிந்ததற்காக 6 பலஸ்தீனிய இளைஞர்களுக்கு இராணுவ நீதிமன்றத்தினால் தலா இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைக்கு அனுப்பப்பட்டவர்களில் பதினைந்து வயதுச் சிறுவனும் ஒருவன்.

கடந்த ஓராண்டுக்கு மேலாக ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தை மீட்டு எடுப்பதற்காக பலஸ்தீனியர் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

அதை அடக்குவதற்கு இஸ்ரவேலிய இராணுவம் கடைப்பிடிக்கும் அடக்கு முறைச்சட்டங்களில் ஒன்று ... பவருக்கு சிறைத்த... பதுமாகு...

இதனி... தீனியர் ... படும் ... தாக்குத... ஐ. நா. ... லாளர் தெரிவித்...

அதே ... ஆக்கி... தாக்கு ... டகால ... விதிப் ... பலஸ் ...டத்தப் ...வியத் ...றித்து ... செய ... கவலை ...ர்.

...ட்ட பகுதிகளில் வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்க முடியும் என்று இஸ்ரவேலிய பிரதமர் ஷாமிர் அறிவித்திருக்கிறார்.

எக்காரணம் கொண்டும் பலஸ்தீன நாடு அமைவதை இஸ்ரவேல் எக்கட்டத்திலும் அனுமதிக்காது என்றும் பிரதமர் ஷாமிர் தெரிவித்தார். (எ)

## இராமகிருஷ்ண மடத்தலைவர்

கல்கத்தா, பெப் 1

இராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் புதிய தலைவராக சுவாமி பூட்டேஷானந்தா தெரிவு செய்யப்பட்டார்.

78 வயதான இவர் 1975 இல் இருந்து உப தலைவராகப் பணிபுரிந்து வந்தார்.

தலைவராக இதுவரை காலமும் பணிபுரிந்து வந்த சுவாமி கம்பீரானந்தா கடந்த டிசம்பரில் காலமானார் என்பது தெரிந்ததே. [எ]

## ஜானகி அம்மாள் அரசியலுக்கு முழுக்கு

சென்னை, பெப் 1

தமிழ்நாடு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக முன்னாள் முதலமைச்சர் ஜானகி அம்மாள் இராமச்சந்திரன் அறிவித்திருக்கிறார்.

மறைந்த முதலமைச்சர் எம். ஜி. ஆரின் துணைவியார் இவர்.

எம். ஜி. ஆரின் பின்னர் பிளவுபட்ட அ. தி. மு. கவின் ஓர் அணிக்கு இவர் தலைமை வகித்தார்.

அந்த அணி, கடந்த சட்டசபைத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது.

197 வேட்பாளர்களில் முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் மட்டுமே சேரன்மாதேவி தொகுதியில் 700 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டினார்.

ஜானகி அம்மாளே ஆண்டிப்பட்டித் தொகுதியில் தோற்றுப் போனார்.

மக்களின் தீர்ப்புக்குத் தலை வணங்குகின்றேன் —இப்படி ஜானகி அம்மாள் ஓய்வு பெறுவது பற்றி விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

அ. தி. மு. கவின் ஜெயலலிதா அணி 27 இடங்களைப் பெற்று தமிழ் நாடு சட்டசபையில் இரண்டாவது பெரும்பான்மைக் கட்சி என்ற அந்தஸ்தை வகிக்கிறது. (எ)

## போ[தைப் பொருள் கடத்தலைத் தடுக்க]
## நா[ன்கு ... மைல் நீளக் கால்வாய்]

போ[தைப்பொருள் க]டத்தலைத் [தடுக்க] நான்கு ...மைல் ...மான கால்வா[ய்] அமெ[ரிக்க] ...ரிக்க ... மெக்ஸிகோ எல்லையி[ல் அமைக்கப்பட்டு] வருகிறது.

இ... நிலத்து... ...ாலயை 'பெர்... ...லான மெக்ஸி[கோ] என்று ...டித்து ...சுகண்

அமெரிக்காவில் உற்பத்தியாகும் ஹெரோயின், கொக்கெயின் ஆகிய போதைவஸ்துகளில் மூன்றில் ஒரு பங்கு மெக்ஸிகோவுக்குக் கடத்தப்படுகிறது.

இதைத் தடுக்கவே இந்தக் கால்வாய் 40 லட்சம் டொலர் செலவில் அமைக்கப்படுகிறது. (எ)

## இடி [அமீ]ர் மர்ம மறைவு
## [சவூதியி]ல் அவர் இல்லை!

..., பெப் 2

உக[ண்டாவின்] முன்னாள் சாவாதுகாரி இடி அமீன் எங்கு சென்றார்?

இதில் மர்மம் இருப்பதாக சவூதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உகண்டாவுக்குத் திரும்ப முயற்சித்தசமயம் ஸயாரே அரசு அமீனைக் கைதுசெய்து அவருக்கு அடைக்கலம் அளித்த சவூதி அரேபியாவுக்கு விமானம் ஒன்றில் ஏற்றி அனுப்பி வைத்தது. ஆனால் அவர் சவூதிவந்து சேரவில்லை என்று சவூதி மன்னர் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் இடிஅமின் முதலில் லிபியா சென்றார். பின்னர் சவூதியில் தஞ்சம் புகுந்தார். (எ)

## எம்.ஜி.ஆரின் வாரிசு நானே ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, பெப். 1

தி. மு. க. அரசின் அடக்குமுறை நிர்வாகம் ஆரம்பித்துவிட்டது.

அ. தி. மு. க. 'ஜெ' அணித்தலைவி ஜெயலலிதா இப்படித் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின்னர் 'ஜெ' அணித் தொண்டரான ஜெஹங்கிர் என்பவர் ஆலந்தூரில் கொல்லப்பட்டார்.

ஜெயலலிதா ஜெஹங்கிரரின் விட்டுக்குச்சென்று அனுதாபம் தெரிவித்தார்.

அதன்பின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையில் எதிர்பார்த்தபடி தி. மு. கவின் அடக்குமுறை ஆட்சி ஆரம்பமாகிவிட்டது அதற்கு முதற்பலியாக எனது கட்சித் தொண்டர் ஆளாகிவிட்டார்.

தேர்தல் முடிவுகள் எம் ஜி ஆரின் வாரிசு எனது அணி என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டன.

கட்சி நிதியில் இருந்து 20 ஆயிரம் ரூபாவை ஜெயலலிதா இறந்தவரின் குடும்பத்துக்குவழங்கினார். (எ)

## கடனை வசூலிக்க நவீன முறை கர்நாடகத்தில் அறிமுகம்

பெங்களூர், பெப். 1

கடனை அறவிட அரசு நவீன முறை ஒன்றை கர்நாடக மாநிலத்தில் கடைப்பிடித்து வருகிறது

வேளாண்மைக் கடனாகப் பெற்ற பணத்தை விவசாயிகள் வரட்சி காரணமாக அரசுக்குத் திருப்பிச் செலுத்த முடியவில்லை.

ஆனால் கர்நாடக மாநிலத்தில் சிமோகா மாவட்டத்தில் உள்ள ஷிகாரிபூர் தாலுக்காவில் தாசில்தார் புதியமுறை ஒன்றை கடைப்பிடித்து வருகிறார்.

கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்களின் வீட்டுச் சுவர்களில் 'அரசின் கடன்காரர்' என்று எழுதி விடுகின்றனர்.

பத்து ரூபா கடனைச் செலுத்த வேண்டியவரின் வீட்டுச்சுவரைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை

இதை விவசாயிகள் ஆட்சேபித்துள்ளனர்.

## ராஜதந்திர உறவு

சோல், பெப் 1

ஹங்கேரியும் தென்கொரியாவும் முதல் தடவையாக பூரணமான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன. (எ)

## தமிழக தேர்தல் முடிவு பற்றிகாங்கிரஸ் கருத்து

புதுடில்லி, பெப். 1

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது சரியே.

இப்படி இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதுடில்லியில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் தமிழக தேர்தல் முடிவுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது

முடிவில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது [எ]

## ஆண் தாதிக்கு இலக்கியப் பரிசு

லண்டன், பெப் 1

எழுதுவதை பொழுதுபோக்காக ஆரம்பித்த பிரிட்டிஷ் ஆண் தாதி ஒருவருக்கு 1988 இன் இலக்கியப்பரிசு வழங்கப்பட்டது.

அவர் எழுதிய 'The Comforts of madness' என்ற நாவலுக்கு அப்பரிசு வழங்கப்பட்டது. இதுவே அவரது முதலாவது நாவல் ஆகும்.

புத்தக வெளியீட்டாளர்கள் இதற்கு மூன்றுவது இடத்தையே கொடுத்தனர்.

36 ஆயிரம் பவுண்களைப் பரிசாகப் பெறும் இவரின் பெயர் திரு. போல் செயர், வயது 33 யோர்ஷயர் வடக்கில் உள்ள கிளிப்டன் ஆஸ்பத்திரியில் வயோதிப நோயாளர்களைக் கவனிப்பதே இவரது தொழில். (எ)

## ஐந்து பேருக்கு பகிரங்க தூக்கு

தெஹ்ரான், பெப் 1

ஐந்து ஆப்கன் பிரசைகள் கடந்த திங்கட்கிழமை ஈரானில் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டனர்.

ஈரானில் போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டது. பதின் மூன்று கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமை, ஆகியவை தொடர்பாக இராணுவ நீதிமன்றத்தில் இவர்கள் விசாரிக்கப்பட்டனர். (எ)

## உணவுக் கப்பல் கடலில்மூழ்கியது

வாஷிங்டன், பெப் 1

அன்டார் டிக்கா கடலில் ஆர்ஜென்டீனாவின் உணவுப் கப்பல் ஒன்று மூழ்கியது.

செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

அக்கப்பலில் இருந்த 2 லட்சத்து 50 ஆயிரம் கலன் டீஸல் கடலில் கலந்திருப்பதால் வட துருவத்தில் சூழல் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

கப்பலைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் சூறுவளி காரணமாகக்கைவிடப்பட்டன. (எ)

## அறுவர் கொலை!

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரை சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது (எ)

# 'மூன்றும் உலக' நாடுகளில் ஆயுதப் போட்டி!

வறுமையில் வாடும் மூன்றும் உலக நாடுகள் மேலும் மேலும் அதிகமான நிதியை ஆயுதங்களுக்காகச் செலவிடுகின்றன; பிரந்தியப் போர்களில் ஈடுபடுகின்றன வல்லரசுகளின் சூழ்ச்சியே இந்நிலைமக்கு முக்கியக் காரணம் என்றுகட்டுரையாளர் கருத்துத் தெரிவிக்கிறார்.

மனித வர்க்கம் அழியாமல் இருப்பதற்காக அணு ஆயுதங்களைக் குறைப்பதும் ஒழிப்பதும் இன்றியமையாதது என்பது உண்மைதான்.

ஆனால், இதன் வாயிலாக உலகப் பொருளாதார நிலைமையில் அதிகமான மாறுதல் ஏற்படாது. ஏனெனில், ஒரு மதிப்பீட்டின் படி உலக நாடுகளின் மொத்தப் பாதுகாப்புச் செலவில் (சுமார் 1, 00. 000 டொலரில்), அணு ஆயுதங்களுக்கான செலவு 15 சதம்தான்.

உலக ஏழை மக்களின் மிகப் பெரும்பாலோர் மூன்றும் உலக நாடுகளில் வசிக்கிறார்கள்.

போதிய உணவு, உடை, உறைவிடம், கல்வி வசதி இல்லாமல் இவர்கள் கஷ்டப்படுகின்றனர்.

ஆனால் இந்த நாடுகளின் ராணுவச் செலவு, மொத்த உலக ராணுவச் செலவில் 20 சதமாகும்.

வல்லரசுகளின் அபாயகரமான ஆயுதங்களுக்கு லாபகரமான சந்தையாக, வளரும் நாடுகள் பயன் படுகின்றன.

இந்த ஆயுத விற்பனை அடியோடு நிறுத்தப்பட்டால் இந் நாடுகளின் மக்களுடைய வாழ்க்கைத் தரம் கணிசமாக உயரும்.

உலகை அடியோடு அழிப்பதற்கு 4, 000 அணுகுண்டுகள் போதும் என்று கருதப்படுகின்றது.

ஆனால் வல்லரசுகளின் வசம் ஏற்கனவே 60 000 அணுகுண்டுகள் இருக்கின்றன.

எனினும், இவற்றைக் குறைத்தால் மாத்திரம் போதாது; அணுகுண்டுகள் அல்லாத ஆயுதங்களை மூன்றும் உலகுக்கு விற்பதைத் தடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

### வறுமையும் இராணுவச் செலவும்

மூன்றும் உலகில் ஆண்டு தோறும் ஐந்து கோடிப் பேர் பட்டினியாலும் போஷாக்கு இல்லாமையாலும் இறக்கின்றனர்.

ஆனால் வல்லரசுகளின் மொத்த ஆயுத விற்பனை வருமானமாகிய ரூபா 15.000 கோடியில் முக்கால் பங்கு மூன்றும் உலகிலிருந்து கிடைக்கிறது. தவிர மூன்றும் உலக நாடுகளின் மொத்த உற்பத்தியின் மதிப்பு 1950 இல் 25 ... டாலராக இருந்தது. இது 1985 இல் 150 டாலராக அதிகரித்தது.

80 கோடி மக்கள் சத்துணவுஇல்லாமலும் 150 கோடி பேர் மருத்துவ வசதி இல்லாமலும் அவதிப்படும் நிலையில் மூன்றும் உலக நாடுகள் தங்கள் அரியநிதியைஆயுதங்களுக்காகச் செலவிடுகின்றன.

இந் நாடுகளில் 80 கோடிப் பேருக்கு எழுத்தறிவு இல்லை. 100 கோடி பேருக்கு வேலையில்லை மக்களில் பாதிப் பேர் அசுத்த நீரைக் குடிக்கின்றனர் வியாதிகளில் 80 சதவீதம் நல்ல குடிநீர் இல்லாமையால் ஏற்படுகின்றன.

வளரும் நாடுகளின் ராணுவங்களில் சுமார் 150 லட்சம் பேர் உள்ளனர். ஒரு படை வீரருக்கு ஆகும் செலவில் 164 பேருக்குக் கல்வியும் மருத்துவ வசதியும் சமூகப் பாதுகாப்பு வசதிகளும் அளிக்க முடியும் ஆயிரம் சிசுக்களில் 106 பேருக்கு மேல் இறப்பு விகிதம் நிலவும் 43 நாடுகள் சுகாதாரத்துக்குச் செலவிடுவதைவிட அதிகமான நிதியை இராணுவத்துக்குச் செலவிடுவதாக ஐ. நா வின் ஆய்வில் புலனாகியிருக்கிறது.

1849 இல் ரூபா 150 கோடியாக இருந்த இந்தியாவின் பாதுகாப்புச் செலவு, 1988 இல் ரூபா 14,000 கோடியாக அதிகரித்திருக்கிறது. வேறு பல நாடுகளைப்போலவே இந்தியாவும், நபர் வாரியாகக் கல்விக்கும், சுகாதாரத்துக்கும் செலவிடுவதைவிடச் சுமார் இரு மடங்கு நிதியைப் பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது.

கல்வி, சுகாதாரம், சமூகப்பாதுகாப்பு ஆகியவற்றுக்குச் செலவிடுவிதைவிட 10 மடங்கு அதிகமான நிதியை இராணுவத்துக்காகப் பாகிஸ்தான் செலவிடுகிறது. (ஒரு போர் குண்டு வீச்சு விமானத்தின் விலையில் 16 பெரிய ஆஸ்பத்திரிகளை நிறுவ முடியும்)

### வல்லரசுகளின் சூழ்ச்சி

நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும் போது வளரும்நாடுகள் தாங்களாகவே பாதுகாப்புசெலவைக்குறைத்தால் என்ன என்று கேள்வி எழலாம் ஆனால் இது முற்றிலும் அவற்றின் கட்டுப்பாட்டில் இல்லை.

ஏனெனில் வல்லரசுகளும், அவற்றின் ஆயுதக் கம்பெனிகளும் செய்யும் சூழ்ச்சியினால் ஆயுதப் போட்டியில் வளரும் நாடுகள் ஈடுபட நேரிடுகிறது.

உதாரணமாக. வளரும் நாடு ஒன்றில் ஒரு நவீன ஆயுதம் அல்லது தளவாட அமைப்பை அந்நிய ஆயுதக் கம்பெனிகள் புகுத்தினால், அந்தப் பிராந்தியத்தின் மற்ற எல்லா நாடுகளின் பழைய ஆயுதங்களும் பத்தாம்பசலி ஆகிவிடுகின்றன. அதனால் அவையும் இந்த நவீன ஆயுதங்களை வாங்க முற்படுகின்றன.

இதே போல் வல்லரசுகள் இராணுவக் கூட்டுகள் அமைப்பதாலும், பிற நாடுகளில் இராணுவத் தளங்களை நிறுவுவதாலும். அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள மற்ற நாடுகளும் ஆயுதப் போட்டியில் சிக்கிக் கொள்கின்றன.

மூன்றும் உலக நாடுகளில் ஆயுதங்கள் இவ்வாறு புகுத்தப்படுவதால் பல்வேறு பிராந்தியங்களில்கொந்தளிப்பும் போர்களும் ஏற்படுகின்றன. இதனால் ஆயுத விற்பனையும் அன்னியத் தலையீடும் மேலும் அதிகரிக்கின்றன.

ஆயுத உற்பத்தியாளர்கள் தங்கள் நாட்டு அரசுகளுக்கும் கணிசமான நிதி அளிப்பதால் அவர்களுக்கு அந்த அரசுகள் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன.

அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதப் பரிகரண ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவர் ருத்சிவார்ட் 1981இல் வெளியிட்ட ஓர் ஆய்வறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் நடந்துள்ள 125-க்கும் மேற்பட்ட சண்டைகளில் 95சத மோதல்கள் வளரும் நாடுகளில் மூண்டவையே. பெரும்பாலான மோதல்களில் அன்னியப் படைகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. 79சதத் தலையீடுகள் மேலை நாடுகளாலும், 6சதத் தலையீடுகள் கம்யூனிஸ்ட் நாடுகளாலும், எஞ்சிய தலையீடுகள் மற்ற வளரும் நாடுகளாலும் ஏற்பட்டவை.

இந்தப் பின்னணியைக் கவனித்தால் மனித உரிமைகள் பற்றிய மேலை நாடுகளின் கரிசனம் வெறும் கேலிக்கூத்து என்பது புலனாகும்.

ஆயுதங்களுக்காக 17 லட்சம் டாலர் செலவிடப்படும் ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒரு குழந்தை இறக்கின்றது அல்லது பிணிக்கு மருந்து இன்றி ஊனமடைகின்றது: இந்தக் கொடிய நிலைமையை வல்லரசுகள் இன்னும் எவ்வளவு காலம் புறக்கணிக்கப் போகின்றன?

- தீபன் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை :-: யாழ்ப்பாணம்.

# உதயன்

02 02 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் புடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, . யாழ்ப்பாணம்.

முன்னர் தீர்மானித்தபடி

## சகல பல்கலைக்கழகங்களும் மார்ச் 2 இல் திறக்கப்படும்

கொழும்பு, பெப் 2 முன்னர் தீர்மானித்தபடி சகல பல்கலைக்கழகங்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி திறப்பது என்று உபவேந்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

1986,1987 ஆம் ஆண்டுகளுக்கான புதிய மாணவர்கள் எதிர்வரும் ஆகஸ்டில் அனுமதிக்கப்படுவர் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் எல். பி. என். பெரேரா தெரிவித்தார். [ஒ-எ]

## இந்தியப் பிரசைகளின் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, பெப் 2 இலங்கையில் உள்ள இந்தியப் பிரசைகளுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் இந்த நிறுவனங்கள் மீது திடீர் தாக்குதல்களை நடத்தலாம் என்று இலங்கை அரசு அதிகாரிகள் தன்னிடம் தெரிவித்ததாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே.என். டிக்ஸிற் நேற்றுத் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்படலாம் என்பது பற்றி தனக்கும் நேரடியாக, சுயேச்சையான முறையில் தகவல் கிடைத்திருப்பதாகவும் திரு டிக்ஸிற் தெரிவித்தார்.

'இதைத் தொடர்ந்து' இந்தியர்களின் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி நான் இலங்கை அரசைக் கேட்டுள்ளேன் — என்றும் திரு. டிக்ஸிற் தெரிவித்தார். [உ-எ]

## ரணில் இன்று திருமலைக்கு

யாழ்ப்பாணம் பெப் 2 கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க இன்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

வடக்கு — கிழக்கு மாகாணசபையின் கல்வி சம்பந்தமான அதிகாரங்கள் குறித்து இன்று திருகோணமலையில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள் அங்கு சென்றுள்ளனர்.

மாநில அமைச்சர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-10]

## சென்னை, மதுரை, கோவை மாநகரசபைத் தேர்தல்கள்

### கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர சபைகளுக்கான தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் மூன்றாம் வாரத்தில் நடத்தப்படும்.

முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று இதனை செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தி.மு.க. அமைச்சரவையின் முதலாவது கூட்டம் நேற்று நடந்தது. சட்டசபையில் ஆளுநர் நிகழ்த்தவிருக்கும் உரையின் அனைத்து அம்சங்களும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன என்றும் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார். [ஒ-எ]

## 700 போயிங் விமானங்களை மீள் பரிசோதிக்க பணிப்பு

வாஷிங்டன், பெப் 2 பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 700 க்கு அதிகமான போயிங் விமானங்களை உடனடியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி அமெரிக்க சிவில் விமானப் போக்குவரத்துப் பிரிவு நேற்று உத்தரவிட்டது.

போயிங் 737, 747, 757, 767 ரக விமானங்களே சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இவ் விமானங்களில் தீயணைக்கும் சாதனங்கள் சரியான முறையில் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனும் இதே போன்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (உ-எ)

## தொண்டர் படை நடைமுறை குறித்து அதிகாரி விளக்கம்

காங்கேசன்துறை பெப் 2 மக்கள் தொண்டர் படையின் அமைப்பு முறை, நடைமுறைகள் குறித்து அமைதிப் படையின் பொறுப்பதிகாரி மேஜர். ஜெனரல் சர்தேஷ் பாண்டே காங்கேசன்துறை மக்கள் தொண்டர் படை அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றின் போது எடுத்து விளக்கினார்.

இப்பகுதியைச்சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

மக்கள் தொண்டர் படையின் கடமைகள் குறித்தும், மக்கள் தொண்டர் படைக்கும், மக்களுக்கும் இருக்க வேண்டிய அந்நியோன்னியம் குறித்தும் இக்கலந்துரையாடலின் போது அமைதிப்படைப் பொறுப்பதிகாரி விளக்கம் அளித்தார். (அ-68)



ஜெயலலிதா

## மின் கட்டணம் குறையும்?

கொழும்பு, பெப் 2 மின்பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும் எரிபொருள் கட்டணம் ஜூன் மாதம் முதல் ரத்துச் செய்யப்படும்.

மின் சக்தி, எரிபொருள் அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போது மின்பாவனையாளரிடமிருந்து 20 சதவீத எரிபொருள் வரி சேகரிக்கப்பட்டு வருகிறது (உ-எ)

## சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி

கொழும்பு பெப் 2 சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி ஏற்றும்படி மக்கள் விடுதலை முன்னணி தென் பகுதி மக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது

சுதந்திர தினமன்று தேசியக்கொடியைப் பறக்க விடக் கூடாது என்று ஜே. வி. பி யின் இராணுவப் பிரிவு தேசபிரேமி இயக்கம் கேட்டுள்ளது. (ஒ-எ)

## சுற்றிவளைப்பு

பச்சிலைப்பள்ளி பெப் 2 கடந்த செவ்வாய்க்கிழமை மிருசுவில் வடக்கு, உசன், கரம்பகம், விடத்தல்பளை ஆகிய பகுதிகள் அமைதிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

அங்கு இடம்பெற்ற தேடுதலை அடுத்து முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஒ-117)

## நிவாரணம் பெறுதவரின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், பெப் 2 யாழ்ப்பாணம், பெரியகடை கிராம சேவை அலுவலர் பிரிவில் இதுவரை நிவாரணம் பெறுதவர்களை அப்பகுதி கிராம சேவை அலுவலர் திரு. வி. கே. தளையசிங்கம் தம்மைச் சந்திக்குமாறு கேட்டுள்ளார். (ஒ)

## 2 ஆம் கட்ட....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்தது.

இரண்டாம் கட்ட ஆயிரம்ரூபா நிவாரணப் பணமும அரச வங்கிகள் மூலமே வழங்கப்படும் அதற்கான ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்படும் எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் உதயனுக்குத் தெரிய வந்துள்ளது. (அ-ஐ)

# அரசியலை துறக்காதீர்கள்; ஜானகியிடம் ஜெயலலிதா

### ஒன்றுபடுவதை கருணாநிதி தடுப்பதாகக் குற்றச்சாட்டு

சென்னை, பெப் 2 அரசியலை விட்டு விலக வேண்டாம் என்று ஜெயலலிதா, ஜானகி அம்மாளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

''ஒன்றுபட்ட அ. தி. மு. கவின் தலைவியாக நீங்கள் இருங்கள்: நான் பொதுச் செயலாளராகப் பணிபுரியத் தயார்'' — இப்படி செல்வி ஜெயலலிதா, நேற்று திருமதி ஜானகி அம்மாளுக்கு விடுத்த வேண்டுகோளில் கூறியிருக்கிறார்.

முதலமைச்சர் கருணாநிதி தான் எம்.ஜி.ஆரின் தொண்டர்கள் ஒன்றுபடுவதைத் தடுத்து வருவதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையில் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இதனிடையில் ஜானகி அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் வி. வி. சுவாமிநாதன், '' அ. தி. மு. கவை ஒன்றுபடுத்த ஜெயலலிதா இப்போது முன்வந்திருப்பது எம். ஜி. ஆர் விட்டுச்சென்ற 100 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அபகரிக்கும் முயற்சியே! — என்று குற்றஞ் சாட்டியுள்ளார். (ஒ-எ)

## தீக்கிரை

சென்னை, பெப் 2 சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் சுமார் 250 ஓலைக் குடிசைகள் நேற்று தீக்கிரையாகின.

இதனால் 300 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டன. [ஒ-எ]

## மாலைதீவு புரட்சிச் சதி: புளொட் செய்ததாக குற்றம் சாட்டுகிறார் கையூம்

மாலே, பெப் 2 கடந்த வருடம் தமது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு, இலங்கையின் தமிழர் ஆயுதக் குழுக்களில் ஒன்றான புளொட் இயக்கமே புரட்சிச் சதி முயற்சியில் ஈடுபட்டதாக, மாலைதீவின் ஜனாதிபதி முகம்மது அப்துல் கையூம் குற்றஞ் சாட்டினார்.

மாலைதீவு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தமது போராட்டத்தை நடத்துவதற்கு மாலைதீவை ஒரு தளமாகப் பாவிக்கும் நோக்கத்துடன் புளொட் தலைவர் திரு. உமாமகேஸ்வரனே சதி முயற்சியைத் திட்டமிட்டு நடத்தியதாகவும் ஜனாதிபதி கூறினார்.

சதி முயற்சிச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் 70 பேர் இலங்கைத் தமிழர்கள்.

சதி வழக்கில் தமிழர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால்தான் வழக்கு விசாரணை ஆரம்பமாவது தாமதமாகிறது தாமதத்தை நீக்க இந்தியாவிலிருந்து அதிகாரிகள் மாலைதீவு வருவர்.

இச்சம்பவம் தொடர்பாக 180 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை — என்றும் ஜனாதிபதி கையூம் தெரிவித்தார். (அ-எ)

ஆசிரியர் சேவைக்கால முன்பயிற்சி:

## இன்று உடனடியாக பதிந்து கொள்ளுங்கள்!

யாழ்ப்பாணம், பெப் 2 ஆசிரியர் நியமனத்துக்கு முந்திய சேவைக்கால முன் பயிற்சிக்கு அழைக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கு சமுகம் கொடுக்குமாறு கல்விப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

சேவைக்கால முன் பயிற்சி நெறிக்கு 71 பேரின் பெயர்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன என்றும் குறைந்தளவு எண்ணிக்கையினரே நேற்று தமது பெயர்களைப் பதிவு செய்திருந்தனர் என்றும்-

கடந்த 30 ஆம் திகதி வெளியான 25 பேரின் பட்டியலில் இருந்து 9 பேர் மட்டுமே தமது பெயர்களைப் பதிவு செய்திருந்தனர் என்றும்-

எனவே இதுவரை பதிவு செய்யாதவர்களை, இன்று யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்குச் சென்று தமது பெயர்களைப் பதிவு செய்து பயிற்சிக்கு செல்லுமாறு யாழ் பிரதம கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆகக் கடைசியாக வெளியான பெயர்ப்பட்டியலில் இருந்து பின்வருவோர் இன்று தமது பெயர்களைப் பதிய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர் :-

1 திருமதி எஸ் இளவதி (வியாபாரிமூலை), 2 திருமதி எம் நிர்மலா தேவி (அல்வாய் தெற்கு), 3 திருமதி ரி. சுகந்தி (பெரியபளை), 4 திரு எஸ் எம். இலக்குமிகரன் (புன்னாலைக்கட்டுவன்). 5. செல்வி எம். மதிவதனி (சரசாலை வடக்கு), 6 சி. கௌரிமலர் (கட்டைடப்பிராய்). 7. எம் ஏ. ஜானகிதேவி (யாழ்ப்பாணம்) 8 எஸ். செல்வரத்தினம் (தொல்புரம் கிழக்கு), 9 கே மனோரஞ்சனி [கரம்பொன் கிழக்கு], 10. கே. வசந்தா தேவி (2 ஆம் வட்டாரம், யோகபுரம்). 11 ஆர். இராஜேஸ்வரி [கனகராயன்குளம்]. 12 எஸ். புனிதவதி (கரம்பொன் கிழக்கு). 13. பி. சுப்பிரமணியம் (புத்தூர் கிழக்கு), 14, ஏ. சோகிலாவதி (8 ஆம் வட்டாரம் நெடுந்தீவு), 15. எஸ் மேரி அமலா (கரம்பொன்), 16 எஸ். ஜெ·தீஸ்வரி (வவுனியா) [அ-10]

## இன்று சுன்னாகத்தில் நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப் 2 (உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணமாக 3 ஆயிரத்து 815 ரூபாவை இன்று 68 பேர் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் பெறலாம்.

கந்தரோடை கிராம சேவைப் பிரிவைச் சேர்ந்த 39 பேரும் புன்னாலைக்கட்டுவன் கிராமசேவைப் பிரிவைச் சேர்ந்த 29 பேருமே இன்று நிவாரணம் பெறுகின்றனர்.

## சுட்டுக்கொலை

சாவகச்சேரி, பெப். 2 மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை ஆசிரியை திருமதி புனிதவதி இரத்தினசபாபதி (45 வயது) துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

மீசாலையில் உள்ள அவரது வீட்டில் வைத்தே அவர் சுடப்பட்டார். (ஒ-31)

## நடுவானில் விமானம் சிதறியது!

வாஷிங்டன் பெப் 2 அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த 19 பேரும் உயிரிழந்தனர்.

வானில் பறந்தபடியே ஏனைய விமானங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் வசதிகள் செய்யப்பட்டது இந்தவிமானம்.

இந்த விபத்துச் சம்பவம் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் இடம்பெற்றது. [ஒ-எ]

## கீரிமலையில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம். பெப் 2 கீரிமலைப் பகுதியிலும் நேற்று மாலை 3 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது

இதன்போது காயமடைந்த 45 வயதுடைய ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் (ஒ-10)

## நஜிபுல்லா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லாத ஒரு கட்டடம்' [Building without girder] ஆகும்

சோவியத் படைகள் முற்றாக வெளியேறிய பின்னர் ஆப்கனில் பரவலான அமைதியின்மை நிலவும்.

ஆக மிஞ்சியது ஜூலை மாதத்தில நஜிப் அரசு கவிழ்ந்து விடும.

இப்படி அவர் சொன்னார். (உ-எ)



ஜானகி

## பொருளாதார வளர்ச்சி பாதிப்பு

1988 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மோசமாக பாதிக்கப்பட்டதாக உலகவங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

வரட்சி காரணமாக உணவு உற்பத்தி 6 சதவீத வீழ்ச்சி இருந்தது.

உள்நாட்டு அமைதியின்மை காரணமாக 5 லட்சம்பேர் வரை இடம் பெயர்ந்து வாழவேண்டியதாயிற்று என்றும் கூறப்பட்டது. (உ-எ)

கொழும்பு போலீஸ் தாக்குதல்:

## ஊர்காவல், கான்ஸ்டபிள் இருவருக்கும் தொடர்பு?

கொழும்பு பெப் 2 கொழும்பு மாவட்டத்தில் மூன்று பொலிஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஊர்காவல் படை வீரர் ஒருவரும் ரிஸர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குருசுமம பொலிஸ் விடுதியில் கண்டெடுக்கப்பட்ட மணிபர்ஸ் ஒன்றைத் தொடர்ந்தே இச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

அந்த பர்ஸில் இருந்த கடிதத்தில் தாக்குதல் சம்பந்தமான விவரங்கள் எழுதப்பட்டிருந்தனவாம்

சம்பந்தப்பட்ட ஊர்காவல்படை வீரரின் அடையாளஅட்டையும் அந்த பர்ஸில் இருந்தது.

அந்த ஊர்காவல் படை வீரர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## மரண அறிவித்தல்

### திரு. E. V. இராமநாதன்

மல்லாகம். இளைப்பாறிய கல்வியதிகாரி E. V. இராமநாதன் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சேதுநாதன் (ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்). திருச்செந்திநாதன் (ஜேர்மனி), ஸ்ரீ அருள்நாதன் (நோர்வே) பாலமீரா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற நீலகண்டன் (மலேசியா), காலம் சென்ற திருமதி அன்னபூரணியம்மாள் (மலேசியா), காலம் சென்ற வைரவநாதன், முத்துக்குமாரசாமி (சாமி), திருமதி சரஸ்வதி (கந்தர்மடம்), திருமதி விமலாதேவி (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவன் (அதிபர். மல்லாகம் மகாவித்தியாலயம்), சகாதேவன் ஆகியோரின் மைத்துனரும், திருமதி மந்தாகினி, திருமதி ரேணுமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருக்கலியுகன், துர்க்காஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: இ. சேதுநாதன்.
'பத்ம வாசா', சுன்னாகம். (9426)

## OBITUARY

### Mutthucumaru Thangaratnam
(Retired Principal Ramanathan College. Chunnakam)

Beloved wife of the late Thilliampalam Mutthucumaru (Retired Principal Chavakacheri Hindu College), Beloved daughter of late Sangarapilai and Katpaham Chelliah. Dearly loved sister of late Mrs Rasaratnam Veerasingham, Mrs. Alagharatnam Devathasan Mrs Ratna Navaratnam and Chelliah Thurairajasingham, Beloved aunt of Sri devi Arasaratnam Sri jayanthy Nikhilanandan, Sri bhawani Gnanakumaran Sri ram Devathasan. [All of Canada], Sri dharan Devathasan, Mrs. Vimala Krishnapillai Colombo), Veerasingham Rajanandan [Canada) Dr Karunaunadan [U K) and Dr Bhavanandan [U.S A], Attained the lotus feet of Nalluran in Canada on Sunday 29th funeral wednesday 1st Feb in Toronto, Canada.

**Mr D. Sridharan,** 8/4 VivekanandaAvenue, Colombo - 6.

**'Chelliampathy'** 44, Chapel Street. Jaffna

(9416)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது [illegible] 02-02-1989 [illegible] வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [pvt.] Ltd. 292/2 Navalar Road, Jaffna. Thursday 02nd February 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org